Aug 17 - Sep 16 2024

# பொற்றாமரை

ISSN:3048-5339

இதழ் 8 | ஆவணி 2055

வளர் கலை இலக்கிய மொழிபெயர்ப்பு இருமொழித் திங்கள் பன்னாட்டு மின் ஆய்விதழ்



www.potraamarai.com

கட்டுரை : க.ஜெயபாலன், உமாமகேஸ்வரி க., விஜயன் அ. , ம.கார்த்திக் |

சிறுகதை : சின்னச்சாமி | மதிப்புரை : பாத்திமா சு.| பதிவு : அகமது கனி |

மொழிபெயர்ப்புக் கவிதை : கவிதா மணாளன் | கட்டுரைத்தொடர் : சிவக்குமார் ஜி.|

കവിത : പെരിയാർ വിജയൻ | അവലോകനം : സീമ രാജ് ശങ്കർ |

நாட்டார் தொடர் கதை : ப. குணசுந்தரி | கவிதை: குணா, இளையவன் சிவா |

ISSN : 3048 -5339 (Online)
வளர் கலை இலக்கிய மொழிபெயர்ப்பு இருமொழித் திங்கள் பன்னாட்டு மின் ஆய்விதழ்
Developmental Art Literary Translation Studies Bilingual (Tamil & Malayalam) International Monthly e-Journal
www.potraamarai.com
பொற்றாமரை
இதழ்-8 ஆவணி 2055 Aug17-Sep16 2024

## கட்டுரைத் தொடர்

04 பாட்டொன்று கேட்டேன்
ஜி. சிவக்குமார்

## கவிதை

06 உருள்பொட்டலுக்குப் பின்
பள்ளிக்கூடத்தில்
மலையாளப் படைப்பு: ரஹீம் பொன்னாடு
தமிழாக்கம்: கவிதா மணாளன்

07 குணா கவிதைகள்
முனைவர் ப. குணசுந்தரி

07 மழை
இளையவன் சிவா

## சிறுகதை

08 மாமரம் பூக்கத் தொடங்கியது
சின்னச்சாமி

## ஆய்வுக் கட்டுரை

12 தலித்திய நோக்கில்
‘ஒரு சவரக்காரனின் மயிருகள்’
கவிதைத் தொகுப்பு
கார்த்திக்

18 பொறாட்டுகளி - ஒரு வட்டாரக் கலை
முனைவர் க. உமாமகேசுவரி

21 தமிழ்த் திரையுலகின் புதிய போக்குகள்
முனைவர் க. ஜெயபாலன்

22 ஆள் பாதி ஆடை பாதி
முனைவர் அ. விஜயன்

## അവലോകനം

15 ശ്രീവത്സന്റെ മാധുര്യം
സീമ രാജ് ശങ്കർ

## കവിത

17 ശവരം
പെരിയാർ വിജയൻ

## நாட்டார் கதைத்தொடர்

25 அயகிய நல்லச்சி
முனைவர் ப. குணசுந்தரி

## மதிப்புரை

28 ஜி. குப்புசாமியின் மூன்றாவது கண்
முனைவர் சு. பாத்திமா

## பதிவு

32 விதை - 30ஆம் நடவு
அகமது கனி

இதழ்-8 ஆவணி 2055 Aug17-Sep16 2024

ISSN : 3048 -5339 (Online)

பொற்றாமரை

வளர் கலை இலக்கிய மொழிபெயர்ப்பு இருமொழித் திங்கள் பன்னாட்டு மின் ஆய்விதழ்

Developmental Art Literary Translation Studies Bilingual (Tamil & Malayalam) International Monthly e-Journal

| | |
|---|---|
| பதிப்பாசிரியர் | PUBLISHER |
| இ. ஜானகிப்பிரியா | E. Janakipriya |
| இணைப்பதிப்பாசிரியர் | CO- PUBLISHER |
| கௌதம் சங்கர் | Gowtham Sankar |
| முதன்மை ஆசிரியர் | EDITOR-IN-CHIEF |
| கவிதா மணாளன் (முனைவர் க. கதிரவன்) | Kavithaa Manaalan (Dr. G. Kathiravan) |
| ஆசிரியர் குழு (தமிழ்) | EDITORS TEAM (TAMIL) |
| பேரா. க. சிவமணி | Prof. K. Sivamani |
| முனைவர் கு. பத்மநாபன் | Dr. G. Padmanabhan |
| முனைவர் ப. குணசுந்தரி | Dr. B. Gunasundhari |
| முனைவர் உமாமகேசுவரி க. | Dr. Umamakheswari K. |
| முனைவர் கு. சுந்தரமூர்த்தி | Dr. K. Sundaramurthy |
| முனைவர் சீதாலட்சுமி - சிங்கப்பூர் | Dr. Seetha Lakshmi - Singapore |
| எம்.எம். ஜெயசீலன் - இலங்கை | M.M.Jayaseelan - Srilanka |
| சேதுராமன் ரமேஷ் ராஜா - சிங்கப்பூர் | Sethuraman Ramesh Raja - Singapore |
| முனைவர் த. செபுலோன் பிரபுதுரை | Dr. T. Sebulon Prabhu Durai |
| முனைவர் சா. கருணாகரன் | Dr. S. Karunakaran |
| கவிஞர் சோலைமாயவன் (நேர்காணல்) | Poet Solai Maayavan (Interview) |
| கவிஞர் சுடர்விழி | Poet Sudarvizhi |
| ஆசிரியர் குழு (மலையாளம்) | EDITORS TEAM (MALAYALAM) |
| பேரா. அனில் கே.எம். | Prof. K.M. Anil |
| ரதி சுரேஷ் | Rathi Suresh |
| இணையாசிரியர் குழு | CO-EDITORS TEAM |
| வீ. ரமேஷ்குமார் | V. Ramesh Kumar |
| மு. சுதா | M. Sudha |
| முனைவர் செ.சசிகுமார் | Dr. S. Sasikumar |
| ரா. சித்ரா (மெய்ப்புத் திருத்தல்) | R. Chitra (Proof Reading) |
| லா. பீட்டர்பால் | L. Peter Paul |
| துணையாசிரியர் குழு | SUB-EDITORS TEAM |
| ரவீந்திர ஸ்டாலின் (வடிவமைப்புக் குழு) | Ravindra Stalin (Designing Team) |
| ஜோதிலட்சுமி லோ. (நேர்காணல்) | Jothilakshmi L. (Interview) |
| இரா. கீர்த்தி (மக்கள் தொடர்பு) | R. Keerthi (Public Relations) |
| அகமது கனி (பக்க வடிவமைப்பு) | Akamathu Kani (Layout Design) |
| வலையொளிப் பொறுப்பாளர் | YOUTUBE IN CHARGE |
| ராஜேஸ்வரி ராஜா | Rajeshwari Raja |
| வள அறிஞர்கள் | RESOURCE PERSONS |
| முனைவர் ந. மனோகரன் | Dr. N. Manoharan |
| கவிஞர் க. அம்சப்ரியா | Poet K. Amsapriya |
| கவிஞர் இரா. பூபாலன் | Poet Ira. Boopalan |
| முனைவர் இ. கலைக்கோவன் | Dr. E. Kalaikovan |
| நிழற்பட ஓவியர்கள் | PHOTOGRAPHERS |
| தினேஷ் கன்னிமாரி | Dinesh Kannimari |
| ஜி. சிவக்குமார் | G. Sivakumar |
| ஓவியர்கள் | ARTISTS |
| க. ரஞ்சினி | K. Ranjini |
| சு.ச. தாரணி | S.S. Dharani |
| சு. ச. அருள்மொழி | S.S. Arulmozhi |
| சி. ஸ்ருதி | S. Sruthi |
| அ. மாதவன் | A. Madhavan |
| க. கன்னல் இளம்பரிதி | K. Kannal Ilamparithi |

கட்டுரைத் தொடர்

ஜி. சிவக்குமார்

# பாட்டொன்று கேட்டேன்

இப்போது 50களில் உள்ளவர் என்றால், நீங்கள் நிறையக் கடிதங்களை எழுதியிருப்பீர்கள், வாசித்திருப்பீர்கள். பெரும்பாலான கடிதங்கள் இப்படித்தானே ஆரம்பிக்கும்.

நலம். நலமறிய ஆவல்.

ஒரு திரைப்படப் பாடல் இப்படி ஆரம்பிக்கிறது.

நலந்தானா? நலந்தானா?

சண்முக சுந்தரம், நாதஸ்வரக் கலையின் சிகரங்களில் உலவுபவர் என்றால், மோகனாம்பாள் பரதக் கலையின் அத்தனை உச்சங்களையும் அலட்சியமாகத் தொட்டவர், இருவருக்குமிடையே மோதல்கள் நிறைந்த ஒரு காதல் மலர்கிறது. தன்னுடைய முன் கோபத்தினால், சண்முக சுந்தரம் அவசரப்பட்டு எடுக்கிற தவறான முடிவுகளால் இருவருக்குமிடையேயான உறவு பாதிக்கப்படுகிறது.

ஒரு கட்டத்தில், பொறாமை கொண்ட ஒருவனால் கத்தியால் குத்தப்பட்டு உயிர் பிழைக்கிற சண்முக சுந்தரம், தன் தம்பியுடன் கச்சேரி செய்கையில், அவருடைய நாதத்துக்கு ஆடுகிற மோகனா, சண்முக சுந்தரத்தின் கைக் காயத்திலிருந்து வழியும் இரத்தத்தைப் பார்த்துத் துடித்துப் பாடுகிற பாடல்தான் அந்த நலந்தானா? பாடல்.

கலைமணி என்ற புனைப் பெயரில் கொத்தமங்கலம் சுப்பு எழுதி, ஆனந்த விகடனில் 1957-58 ஆம் ஆண்டில், கோபுலுவின் ஓவியங்களுடன் தொடராக வெளி வந்த தில்லானா மோகனாம்பாள் நாவலை, 1968 ஆம் ஆண்டு, ஏ. பி. நாகராஜன் திரைப்படமாக்கினார். சிவாஜி, பத்மினியோடு, நம்பியார், நாகேஷ் என்று ஒரு பெரிய படையே இந்தப் படத்தில் நடித்திருந்தது.

நாவல்களை வெற்றிகரமான திரைப்படங்களாக்குவது இன்று வரை மிகப் பெரிய சவாலாகவே இருந்து வருகிறது.

மிகப் பெரிய வெற்றிப் படமாக அமைந்த இத் திரைப்படம், 1969 ஆம் ஆண்டின், சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்கான விருது பெற்றது. 1970 ஆம் ஆண்டு, சிறந்த தமிழ்ப் படத்திற்கான தேசிய விருதையும், பத்மினி, சிறந்த நடிகைக்கான தமிழக அரசு திரைப்பட விருதையும், சிறந்த துணை நடிகைக்கான தமிழக அரசின் திரைப்பட விருதை மனோரமாவும் பெற்றனர்,

ஒரு சிறு பிரிவுக்குப் பின்னான சந்திப்பில், அத்தனை தடைகளையும் உடைத்து கடலோடு கலக்கத் துடிக்கும் நதியென, மோகனாவின் உள்ளத்தில் அத்தனை துடிப்பு.

சண்முக சுந்தரத்தைப் பார்த்ததில் அத்தனை பரவசம். அவ்வளவும் நொறுங்கும்படியாக, சண்முகசுந்தரத்தின்

கைகளில் வழிகிற இரத்தத்தைப் பார்க்க நேர்ந்த கொடுந் துயரில், அவள் அம்மாவின் அதட்டலையும் மீறிக் கேட்கிறாள்.




நலந்தானா? நலந்தானா?
உடலும் உள்ளமும் நலந்தானா?

கவனித்தீர்களா? வெறுமனே உடல் மட்டுமல்ல, எவ்வளவோ சூறாவளிகளால் சுழற்றப்பட்ட உள்ளத்தின் நலனையும் விசாரிக்கிறாள்.

சண்முக சுந்தரத்தின் கையிலிருக்கும் நாதஸ்வரம் அவளது கேள்வியை அப்படியே எதிரொலிக்கிறது.

உடலும் உள்ளமும் நலந்தானா? என்று நாதஸ்வரத்தில் கேட்கையில், சிவாஜி, வாசித்தபடியே, இடது கண்ணைச் சிமிட்டுகிறாரே, ஆத்தீ.

நலம் பெறவேண்டும் நீயென்று
நாளும் என்னெஞ்சில் நினைவுண்டு
இலைமறை காய் போல் பொருள் கொண்டு
எவரும் அறியாமல் சொல் இன்று

என்று பத்மினி பாடியதும், சொல் இன்று என்று நாதஸ்வரத்தில் சிவாஜி சொல்கையில், அருகிலிருந்த பாலையா தன் மறந்து ஆஹா என்று கைகளை உயர்த்துகிற போது நாமும்தானே அவரோடு இணைந்து கொள்கிறோம்.

கண் பட்டதால் உந்தன் மேனியிலே
புண் பட்டதோ அதை நானறியேன்
என் கண் பட்டதால் உந்தன் மேனியிலே
புண் பட்டதோ அதை நானறியேன்

கண்கள் கலங்க, விரல்களும் நடுங்க பத்மினி சொல்கையில், அதை எதிரொலிக்கிற சிவாஜியின் கண்கள் கலங்கி, வழிகின்ற கண்ணீர் நம்முடையதும் அல்லவா?

புண் பட்ட சேதியைக் கேட்டவுடன்
இந்த பெண் பட்ட பாட்டை யாரறிவார்?

என்று பத்மினி தவிக்க, யாரறிவார்? என்று நாதஸ்வரம் சொல்வது எத்தனை அழகு.

பெருந் துயரில் துவங்குகிற பாடல் இப்படி நம்பிக்கையோடு முடிகிறது.

நடந்ததெல்லாம் மறந்திருப்போம்
நடப்பதையே நினைத்திருப்போம்
பொருத்திருப்போம்
காலம் மாறும் சந்திப்போம்.

இந்தப் பாடலில் நான் மிகவும் வியக்கும் ஒரு விஷயம் ஒன்றிருக்கிறது. இந்தப் பாடலில் சிவாஜிக்கு இணையாக நாதஸ்வரம் வாசிக்கும் ஏவிஎம் ராஜன், நட்டுவாங்கம் செய்யும் தங்கவேலு, மேளம் வாசிக்கும் பாலையா, மிருதங்கம் வாசிக்கும் ராமச்சந்திரன், ஒத்து ஊதும் கருணாநிதி, மகளின் நாட்டியத்தை ரசிக்கும் அதே நேரத்தில், சண்முக சுந்தரத்துடனான அவளது உரையாடல்களை வெறுக்கும் தாயாக சி. கே. சரஸ்வதி என ஒரே மேடையில் எத்தனை, எத்தனை பெரிய ஜாம்பவான்கள் அமர்ந்திருக்கிறார்கள் கவனித்தீர்களா?

சிங்கார வேலனே தேவாவைப் போலவே, இந்தப் பாடலிலும் பெண் குரலும், நாதஸ்வரமும் அப்படி இழைகின்றன.

அது இருக்கட்டும். அங்கே பார்த்தீர்களா? ஒருவரையொருவர் ஏமாற்றியபடி சண்முக சுந்தரமும், அவருடைய குழுவினரும் எங்கோ போகிறார்கள். நட்டுவாங்கமும், மிருதங்கமும் ஒலிக்கிறது. வாருங்கள். நாமும் போகலாம்.

ஒரு தூணின் பின்புறம் மறைந்து சண்முக சுந்தரம் பார்ப்பதை, நடனமாடும் மோகனா பார்த்துக் கேட்கிறாள்.

மறைந்திருந்து பார்க்கும் மர்மமென்ன?
அழகர் மலை அழகா?
இந்தச் சிலை அழகா?

சண்முக சுந்தரம் மறைந்திருந்து பார்ப்பதை, மோகனா எப்படி அறிந்தாள்? இந்தக் கேள்விக்கான விடையை, மோகனாவே சொல்வதைப் பாருங்கள்.

எங்கிருந்தாலும் உன்னை
நானறிவேன் உன்னை
என்னையல்லால் வேறு யாரறிவார்?

பாவை என் பதம் காண நாணமா
உந்தன் பாட்டுக்கு நான் ஆட வேண்டாமா
மாலவா, வேலவா, மாயவா, சண்முகா

என்றதும் சிவாஜி, அதிர்வாரே, அடடா.

நாதத்திலே தலைவன் குழல் கேட்டேன்
அந்த நாணத்திலே என்னை நான் மறந்தேன்

என்ற வரிகளைக் கேட்டதும் பத்மினியின் தாயான சி. கே, சரஸ்வதி குழம்புகிறார்.

அவர் குழம்பட்டும்.

மோகத்திலே என்னை மூழ்க வைத்து
ஒரு ஓரத்திலே நின்று, கள்வனைப் போல்
மாலவா, வேலவா, மாயவா, சண்முகா

புரிய வேண்டியவருக்கு புரிந்து விடுகிறதே. அது போதாதா?

கிரிக்கெட்டில் ஒரு புறம் கங்குலி அடித்து ஆட, மறுபுறம் ரோகித் சர்மா அமைதியாக வேடிக்கை பார்ப்பதைப் போல், இந்தப் பாடல் முழுக்க பத்மினி, ராஜாங்கம் நடத்த, சிவாஜி பார்வையாளராகவே இருப்பார்.

அலங்கார பூஷிதையாய் அமர்ந்து நடனத்தை ரசிக்கும் ஜில் ஜில் ரமாமணி மனோரமா, பத்மினியின் நடனத்தோடு, அவரையும் ரசிக்கும் மைனர், அவரை முறைக்கும் ஒருவர், பாடலை மெய் மறந்து ரசித்து அருகிலிருக்கும் பெண்ணின் மேல் மேளம் வாசிக்கும், பின்னால் நிற்பது சிவாஜி என்று தெரிந்ததும் சத்தமில்லாமல் இடத்தை மாற்றும் பாலையா என ஒரு பாடலில் எத்தனை சுவாரஸ்யங்கள்.

இரண்டு பாடல்களிலும் பெண் குரல் மட்டுந்தான். ஆண் வெறும் பார்வையாளன்தான்.

கண்ணதாசனின் வரிகளும், கே. வி. மகாதேவனின் இசையும், சுசீலாம்மாவின் குரலும் அப்படியே நம்மைச் சொக்க வைக்கின்றன இல்லையா?

செக்கச் சிவந்திருக்கும் இதழில் கனிரசமும் என்ற பாடல் வரிகளுக்கு வாயசைக்கையில், பாடிக் கொண்டே, பாடல் வரிகளைப் பற்றிக் கவலைப்படாமல் உதட்டைக் கடிக்கும், நம்ம வாத்யார் மாதிரி, பத்மினியும் உதட்டைக் கடிக்கிறார்,

இன்னொரு இடத்தையும் கவனியுங்கள்.

ஒரு ஓரத்திலே நின்று கள்வனைப் போல் என்று பாடியபடி, கைகளைக் கட்டிக் கொண்டு தூணில் சாய, கல் குதிரை எனக் காட்டப்படும் அட்டைக் குதிரை, பத்மினியின் பாரம் தாளாமல் அசைகிறது.

அய்யா சாமிகளே, இப்போது கெமிஸ்ட்ரி, கெமிஸ்ட்ரி என்று சொல்கிறீர்களே, இந்தத் திரைப்படத்தில் சிவாஜிக்கும், பத்மினிக்குமிடையில் அது எத்தனை அழகாக பதிவாகியிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

சிவாஜியையும் பத்மினியையும் இணைத்து நிஜ வாழ்விலும் எத்தனையோ கதைகள். ஒரு முறை தொலைக்காட்சியில் பத்மினியம்மாவின் பேட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தேன், முடிந்ததும் அருகிலிருந்த என் அப்பா சொன்னார். கடைசி வரைக்கும் சிவாஜியப் பத்தி ஒண்ணுமே சொல்லலையேடா.

## கவிதை



மலையாளப் படைப்பு: **ரஹீம் பொன்னாடு**
தமிழாக்கம்: **கவிதா மணாளன்**
(ரிஸாலா மலையாள கிழமையிதழில் (24 செப். 2024) வெளிவந்த கவிதையின் தமிழாக்கம்)

# உருள்பொட்டலுக்கு*ப் பின் பள்ளிக்கூடத்தில்

*நாளை பாறைகளைப்பற்றி படிக்கலாமென்று சொல்லிவிட்டுச்
சென்றிருந்தார் கங்காதரன் சார்
சார் பிறகு வரவில்லை.
ஐந்தாம் வகுப்பு 'அ' பிரிவில் இப்போது நிறைய பாறைகள் இருக்கின்றன.*

*ஆற்றினைக் குறித்துள்ள கவிதையைப் பாதியில் நிறுத்திவிட்டு
ஆறுகடந்து போயிருந்தார் சாரதா டீச்சர்
டீச்சர் பிறகு வரவில்லை.
ஆறாம் வகுப்பு 'ஆ' பிரிவே இப்போது ஓர் ஆறுதான்.*

*பாத்திமாவின் ஆடு வாசித்துவரச்சொல்லிவிட்டு
ஹம்சகோயா ஐயா குன்றேறிப் போயிருந்தார்
ஐயா பிறகு வரவில்லை.
எட்டாம் வகுப்பு 'இ' பிரிவில் இப்போது நிறைய ஆடுகளுண்டு.*

*பலவகை மண்ணு மாதிரிகள் சேகரித்துவரச்சொல்லிவிட்டுத்தான்
மாணவர்களை அனுப்பியிருந்தார் தமயந்தி டீச்சர்
மாணவர்கள் பிறகு வரவில்லை.
ஒன்பதாம் வகுப்பு 'ஈ' பிரிவில் இப்போது நிறைய மண்ணுதான் இருக்கிறது.*

*மரங்களைக்குறித்து ஒரு ஆவணப்படம்
எடுக்கலாமென்றுதான் வகுப்புத்தலைவர் போயிருந்தார்
வகுப்புத்தலைவர் பிறகு வரவில்லை.
பத்தாம் வகுப்பு 'உ' பிரிவில் இப்போது நிறைய மரங்கள் இருக்கின்றன.*

*இந்தப் பள்ளிக்கூடத்தை நாம் ஒரு சொர்க்கமாக்க வேண்டுமென்று
கூறிச் சென்றிருந்தார் தலைமையாசிரியர்
தலைமையாசிரியர் மட்டும் மீண்டும் வந்திருக்கிறார்.
பள்ளிக்கூடமே இப்போது சொர்க்கத்தில்தான் இருக்கிறது.*

*உருள்பொட்டல் –
*மண்ணின் அடியில் ஏற்படும் உருளலின் காரணமாக மண்ணின் மேற்புறமுள்ள மரங்களும் கட்டடங்களும் மண்ணிற்குள் புதைந்து உருண்டு போவதைக் குறிக்கும் மலையாளச்சொல். நிலச்சரிவு என்பதிலிருந்து வேறானது இது.*

முனைவர் ப. குணசுந்தரி

## குணா கவிதை

எவ்வளவோ
எழுதவேண்டும்போல் உள்ளது.
எல்லாவற்றையும் எழுதமுடியுமா?

தினமும்
ஏதாவது ஒரு நெனப்பு.
நிகழ்வுகளை அசைபோட
தொலைந்துபோகிறது தூக்கம்.

இவர்களும் உடனிருக்கிறார்களே
தனியாக இருந்தால் கவலையில்லையோ
சொல்லுதல் யார்க்கும்எளிதுதான்
சரி....அனுபவத்தில் புரிந்துகொள்ளட்டும்

தினமும் யாராவது ஒருவர்
பிடிக்காமல் போகிறார்.
சின்னவர் பெரியவர்
ஆண் பெண் பேதமில்லை.

யாராக இருந்தாலும்
இவர் சம்மந்தப்படுவதால்தான்
இந்தத் தொல்லை.

என் பாதிப்பை
எப்போதும் புரிந்துகொள்வதில்லை.

நெருக்கமாய் இருப்போரின் உணர்வுகளை
இருக்கும்போது உணர்வதில்லை.
நாமும் வெளிப்படுத்துவதில்லை.
காயப்படுத்திவிடுவோம் என்றோ?
காயப்பட்டிருக்கிறோம் என்றோ?
வாழ்நாளின் என்றாவது ஒரு கணத்தில்
உணர்த்திவிடவேண்டும்.

எங்கும் சூழ்ந்திருக்கும் அமைதியிலும்
சில்லென்று மென்மையாய்
வீசும் காற்றிலும் வந்துபோகின்றன
நியாயமில்லாத யோசனைகள்

கொசுவின் ரீங்காரத்தில்
அசைந்துகொண்டேஇருக்கிறேன்
நிலையில்லாது.

உண்மைதான்.
இருப்பைப் பகிர்ந்துகொள்ளலாம்
பிரியப்படாதபோது
விட்டுவிடுவதேமேல்.

யாரும் நினைவில்
வைத்துக்கொள்ளப்போவதில்லை.
தலைகனக்கிறது.
குறைந்துபோன பசியோடு
பொழுதுகளின் ஆயுள்
கூடிக்கொண்டேபோகிறது.

சூழலைப் புரிந்துகொள்ள முயல்கிறேன்.
எந்த ஒன்றிற்கும்
தொடக்கம் இருக்கிறது.
தொடக்கத்திற்கு ஏற்றவாறு
அனுபவம் அமைகிறது.
அனுபவம் ஒவ்வொருத்தருக்கும்
வெவ்வேறுதான்.

இருக்கும் இடத்திலிருந்து
விரும்பினாலும்
தொடக்கத்திற்கோ இறுதிக்கோ
ஏன் இடையிலோ
எந்தப்புள்ளிக்கும் செல்ல இயலாது.

யாரும் துக்கப்படாதபோது
ஒவ்வொரு மணித்துளியும் முக்கியமே.
சலனமில்லாது சங்கடப்படாது
பயணிக்க முயல்கிறேன்.

விரும்பத்தகாத நிகழ்வுகள்
மறந்துபோனால்
வாழ்க்கையே புதிதாய் அமையும்.

உன் கருத்துக்களைத் தொடராது
ஆங்காங்கே தேங்கிநின்றாலும்
உன்னைத் தனியே விட்டுவிடாமல்
பயணத்தில் தொடர்ந்தேவருகிறேன்.

இளையவன் சிவா

## மழை

சிறுமழை பிடிக்கையில்
அலறுகிறது அலுவலகம்
வீடடையும் நேரத்தில்
வீதியில் சாக்கடை ஓட்டம்
விரையும் வாகனங்கள்
அள்ளித் தெளித்ததில்
மேனி எங்கும் துர்நாற்றம்

எடுத்து வர மறந்த குடையின் மீது
எப்போதும் போல எரிச்சல்
நிற்கவும் வழியற்று
ஒதுங்கப் பார்க்கும் நிழற்குடைக்குள்
ஓயாமல் வீசுகிறது
மதுவின் வாசம்

நேரத்தைக் கடந்தும்
நிறுத்தத்தைத் தாண்டியும்
நின்றுவிட்ட பேருந்தைப் பிடிக்க
மழையின் வேகத்தில்
சாலையில் ஓட்டம்

இருக்கைகளும் நீராட
நகரப் பேருந்துக்குள்
நனைந்தே பயணம்

கம்பியைப் பிடிக்கவும்
சாய்வைத் தேடவும்
அலையும் உடலோடு
அவ்வப்போது உரசிப் போகின்றன
ஆபாச மனங்களின் விரல்கள்

எப்போதும் போலவே வரவேற்கிறது
மழலையின் விளையாட்டில் மகிழ்ந்து
வீட்டிற்குள் வெள்ளமென
நுழைந்திருக்கும் மழை

**சிறுகதை**

**சின்னச்சாமி**

# மாமரம் பூக்கத் தொடங்கியது

சூரிய ஒளிக்கீற்றுகள் மாமரத்தின் இலைகளில் ஊடுருவி அதனை நிலத்தில் நகலெடுத்துக்கொண்டிருந்தன. பறவைகள் கீச்சிட்டுக்கொண்டிருந்தன. காகங்கள் மட்டும் வட்டமிட்டு கரைந்துகொண்டிருந்தன. மாடுகள் தொழுவத்தில் கத்திக்கொண்டிருந்தன. மாமரத்தின் நிழலில் உறங்கிக்கொண்டிருந்தது அந்த வீடு. காலை எட்டு மணி ஆகியிருந்தது. எப்பொழுதும் போல அந்த வீடு இருக்கவில்லை. வீடு தனித்திருந்தமையால் அதைக் கவனிப்பாரில்லாமல் விடப்பட்டிருந்தது.

காலையில் யுவனை கட்சிப் பணிகளுக்காக அழைத்துப்போக மலையன் வந்து பார்த்த பிறகுதான் தகவல் ஊர் முழுக்கப் பரவியது. இரத்த வாடையும் மூத்திர நாற்றமும் அவனது மூக்கை அச்சுறுத்தியது. யுவன், அவனது அப்பா, அம்மா மூவரும் வெட்டுபட்டு கிடந்தனர். அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற பின்புதான் தெரிந்தது இவர்கள் முன்பே இறந்த போனது. யுவனின் சித்தப்பா இவர்களின் கடைசி சடங்குகளை ஏற்றுக்கொள்வதில் மும்மரமாக செயல்பட்டுக்கொண்டிருந்தார். காவல்துறை, உடற்கூறாய்வு என்று அனைத்தையும் அவரே கவனித்துக்கொண்டார். ஊரில் சிலரே மருத்துவமனைக்கு வந்திருந்தனர். ஊரின் முக்கியஸ்தரான வாசனிடம், 'பொண்ணுக்குத் தகவல் சொல்லியாச்சா' என்று சித்தப்பா ஒருமுறை கேட்டுவைத்தார். மருத்துவமனை சம்பிரதாயங்கள் அனைத்தும் முடிந்து உடல் கையில் கிடைப்பதற்குக் கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்கு மேலானது. மீண்டும் ஒரு முறை முக்கியஸ்த்தரிடம், 'பொண்ணுக்குத் தகவல் சொல்லியாச்சா? இல்லையா?' என்று கேட்க, அவரும் சொல்லியாச்சு என்று முடித்தார்.

********************

சரோஜா யுவனின் ஆசைத் தங்கை. எப்பொழுதும் அவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்வான். சரோஜாவிற்கு சமூகத்தைப் பற்றி ஓரளவு விபரம் தெரியும் வயது வந்த பிறகு அவளை அவன் பள்ளியைத் தவிர எங்கும் அனுமதிக்கவில்லை. முக்கியமாக, சமத்துவம் நகருக்குப் போகவே கூடாது என்று கட்டளையிட்டிருந்தான். அங்கிருந்து வரும் பெண்களுடன் பேசுவதை முழுவதுமாகத் தவிர்க்கச் சொல்லியிருந்தான். பசங்க ஏதாவது தொந்தரவு செய்தால் உடனே சொல்ல வேண்டும் என்று கூறியிருந்தான். ஆனால் சரோஜா தன் போக்கில் இயங்கிக்கொண்டிருந்தாள்.

சரோஜா பள்ளியில் எப்பொழுதும் லட்சுமியுடன்தான் விளையாடுவாள். படிப்பாள். சரோஜாவுக்கு ஆங்கிலமும் கணிதமும் அவள் மூலமே பரிமாற்றம் செய்யப்பட்டு வந்தன.

“இங்க பாருடி எனக்கு யாராவது சொல்லிக்கொடுக்கக் கூடாதுனு உன்னச் சொன்ன, எங்கிட்ட சொல்லிரணும் சரியா” என்று லட்சுமியிடம் பலமுறை பலநாட்கள் சொல்லியிருக்கிறாள். பதிலுக்கு அவளும்,

“இங்க பாருடி அப்படியெல்லா சொன்ன அதுக்கு அசர்ர ஆளு நானில்ல, அங்கெயே என்ன செய்யனுமோ செஞ்சுப்புடுவ, என்ன என்னப் பண்ணுவாங்க அவமானப் படுத்துத்துவாங்க அவ்வளவுதான, அவமானத்துக்கெல்லா பயந்தா வாழ முடியாது. நா அம்பேத்கரு மாதிரியாக்கும்” என்று சொல்லி விடுவாள்.

இவளினுடைய பேச்சுதான் சரோஜாவை இன்னும் உத்வேகப்படுத்தியது. இருவரும் நன்றாகப் படித்து சிறந்த மதிப்பெண்களுடன் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தனர்.

அடுத்தது கல்லூரி என்பது கனவாக இருந்தது.

சரோஜாவும் லட்சுமியும் கல்லூரியில் தமிழ் அல்லது அரசியல் பொருளாதாரம் எடுப்பது என்று முடிவு செய்து வைத்திருந்தனர். ஆனால் இவர்கள் பன்னிரண்டாம் வகுப்பில் படித்த துறை உயிரியல் துறை. அவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு அறிவியல் துறைசார் படிப்புகளில் சேர முடியும். இருப்பினும் இவர்களது இலட்சியம் அரசுப் பணிக்கு செல்வது என்றிருந்தது.

ஒருவழியாக ஒரு தனியார் கல்லூரியில் இளங்கலை தமிழ் இலக்கியத்தில் சேர்ந்தனர். அங்குதான் தனது சொந்த ஊரைச் சார்ந்த ராஜாவும் அதே வகுப்பில் சேர்ந்திருந்தான். சரோஜாவுக்கு அவனை ஒருமுறையோ இருமுறையோ பள்ளியில் பார்த்ததாய் நினைவு. ஆனால் பேசியதில்லை. லட்சுமி அவனிடம் சகஜமாய் பேசிக்கொண்டிருந்தாள். சரோஜா எதுவும் பேசமால் தனது அண்ணனின் கட்டளையை நினைவுப்படுத்திக்கொண்டிருந்தாள்.

எப்படி அண்ணனுக்கு நான் லட்சுமியுடன் பேசுவது தெரியாமல் போச்சு. கண்டும் காணாமல் விட்டுவிட்டானா? வாய்ப்பில்லை அப்படி விடுவதற்கு அவன் சாதாரணமானவல்ல. இரத்தம் முழுக்க இவர்களின் மீதான வெறுப்பு ஊறியிருக்கிறது. அவன் ஒரு பைத்தியம், அறிவற்றவன், உலகத்தைப் புரிந்து கொள்ளாதவன் என்று மனதிற்குள் அண்ணனை கரிந்து கொண்டிருந்தாள்.

அண்ணன் இவர்களை எதிரிகளாகப் பார்க்காமல் மனிதர்களாகப் பார்த்திருந்தால் நிச்சயமாக லட்சுமியிடம் மன்றாடி அவனுக்குத் திருமணம் செய்துவைத்து எனக்கு அண்ணியாக்கி அவளை என்னுடனே வைத்துக்கொள்வேன் என்று எண்ணிய மறுநிமிடம் பளார் என்ற ஒலியுடன் அறை அவளது காதை கணக்கச் செய்தது. ராஜா கன்னத்தில் கைவைத்துக்கொண்டு ஏதும் புரியாதவனாய் நின்றுகொண்டிருந்தான். லட்சுமி டேய், சரோஜா அண்ணங்கிரதுனால சும்மா விடுற. இல்லைனா நடக்குறதெ வேற என்று எகிறினாள். பதிலுக்கு அவனும் எங்க, எங்க என்று எகிற சரோஜா லட்சுமியின் கையுடன் தனது கையை இணைத்துக்கொண்டாள். யுவன் பார்த்த பார்வையில் இணைந்திருந்த கை அனிச்சையாகப் பிரிந்தது.

“உங்கிட்ட என்ன சொல்லிருக்க, நீ என்ன பண்ணீட்டிருக்க” என்று சிறு அதட்டலுடன் சரோஜாவைத் தன்னிடம் இழுத்தான்.

“விடு நா வகுப்புக்குப் போகணும்” என்று அங்கிருந்து ஓடிவிட்டாள். ராஜாவையும் லட்சுமியையும் பார்த்து எள்ளல் புன்முறுவலுடன் யுவன் அங்கிருந்துச் சென்றான். ராஜாவுக்கு என்ன நடந்தது என்று புரியவில்லை.

லட்சுமி வகுப்பிற்குள் நுழைந்ததும் சரோஜா அழத்தொடங்கியிருந்தாள். லட்சுமி அவளை சமாதானப்படுத்தப் போராடினாள். “எனக்காக ஏ பாக்குற, அவன ஓங்கி அறஞ்சிருக்கலாமல்ல” என்று சரோஜா கூற,

“இருந்தாலும் உங்க அண்ண, அதா” என்றாள் லட்சுமி தயக்கத்துடன்,

“பாவம் அந்தப் பையன், எதுக்கு அடி வாங்குனம்னே தெரியாம நின்னுட்டிருந்தா” என்று சரோஜா விம்மினாள்.

“பரவால, நா அவங்கிட்ட பேசிக்கிற”

“இல்ல, நா அவங்கிட்ட மன்னிப்பு கேட்கணும்”

“எதுக்கு, விடு” என்று லட்சுமி முடிக்கும்போது, ராஜா வகுப்பிற்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் லட்சுமியை விலக்கிவிட்டு,

“என்ன மன்னிச்சுரு, நீ எங்கூட பேசிட்டிருக்கனு நெனச்சு எங்க அண்ண உன்ன அடுச்சுட்டா, தயவு செஞ்சு என்ன மன்னுச்சுரு” என்று இரு கை கூப்பினாள்.

“பரவால, நா பெருசா எடுத்துக்கல” என்று முடித்து அந்தப் பிரச்சனையிலிருந்து விடுவித்துக் கொண்டான். இந்த சந்திப்பு, பிறகு மூவருக்குமானதாக மாறிப்போனது சரோஜா, லட்சுமி, ராஜா கல்லூரி தமிழ்த்துறையில் சிறந்த மாணவர்களாகத் திகழ்ந்தனர். மூன்றாமாண்டு படிக்கும் போது லட்சுமிக்கும், சரோஜாவுக்கும் எதேச்சையாக நடந்த ஒரு சிறு சண்டையில், தீர்ப்பு சொல்பவனாக ராஜா இருந்தான். சரோஜாவின் பக்கம் இருந்த நியாயத்தின் அடிப்படையில் அவன் அவளுக்கு சாதகமாகப் பேசினான். லட்சுமி, போகிற போக்கில் சரோஜாவை 'நீ என்ன அவன லவ் பண்றியாக்கும்' என்றவுடன் சரோஜா எந்தத் தயக்கமுமின்றி 'ஆமாம்' என்று சொல்ல, ராஜாவுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான். லட்சுமியும் அந்தச் சண்டையை மறந்து 'ஏ சரோஜா, என்ன சொன்ன' என்று கேட்க, 'ஆமா நா அவன லவ் பண்ற' என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறினாள்.

ராஜாவும், லட்சுமியும் அவளிடம் 'இது ஒத்துவராத விசயம், வா படிக்கிற வேலயப் பாப்போம்' என்று சரோஜாவை அழைக்க, அவள் மீண்டும், 'நா உண்மையாதா சொல்ற, எனக்கும் தெரியும் எங்க வீட்டுல ஒத்துக்க மாட்டாங்கனு, ஆனா ஏனோ இவன்மேல இனம் புரியாத அன்பு, காதல்னா அவ்வளவுதானே, இனம் புரியக்கூடாது, இனம் புரிஞ்சா அது காதலா இருக்காது” என்று லௌகீகத் தத்துவம் பேசினாள்.

“அடி சாமி, போதும், நடக்கறது நடக்கட்டும், இப்ப என்னவோ அதப் பாப்போம்.”

********************

ராஜாவிற்கு ஒன்றும் புரியவில்லை. அவனைப்பொறுத்தவரை, “இது வெளியில் தெரிந்தால் நிச்சயம் சும்மா விடமாட்டார்கள், அசம்பாவிதம் உறுதி, அது எனது கொலையோ, ஊர்க்கொலையோ, ஊரெரிப்போ எது வேண்டுமானாலும் நடக்கலாம். இந்த விசயத்தைப் பொறுத்தவரை நாம் இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் இல்லை. பழங்காலத்தில் இருக்கிறோம்” நான் சரோஜாவிற்கு எப்படி புரியவைப்பது. எனக்கென்று ஒரு கனவு இருக்கிறது. அதை அடைவது என் இலக்கு. இந்த ஊரே மரியாதை செய்யும் இடத்தில் நான்போய் அமரவேண்டும். நம்முடன் இயல்பாக

சரோஜா பழகினாலும் அவளது சமூக அதிகார இருப்பை விட்டுத்தருவாளா? என்பது சந்தேகம்தான், என்ன செய்வது, அவளுக்கு நான் என்ன சொல்வது, இந்த விசயத்திலும் கூட நான் பேச எனக்கு உரிமை இல்லாமல் அவளே ஆக்கிரமித்துக்கொண்டாள். சரியோ, தவறோ எனது எண்ணத்தை அவளிடம் சொல்லிவிடுவது நல்லது" என்று தனது மனதிற்குள் பெருங்காற்றுக்கடலாய் அலையடித்துக்கொண்டிருந்தான்.

சரோஜாவை நேருக்கு நேர் எதிர்கொள்ள அவனுக்குத் தயக்கம் இருந்தாலும் சரோஜா எப்பவும்போல அவனுடன் பேச ஆரம்பித்தாள், ஒருநாள், "என்னடா, கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்றாள்.

அவனும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நா இதுவரைக்கு அந்தமாதிரி உன்ன நெனச்சது கிடையாது. நண்பர்களா இருந்தோ, அப்டியே இருந்துரலா, நமக்குள்ள அதெல்லாம் ஒத்து வராது" என்று பெட்ரோல் முடியப்போகும் வண்டிபோல இழுத்து இழுத்து பேசினான்.

"இது எனக்குத் தெரியாமதா இருப்பனா, நாம நல்லா படிப்போம், அரசு வேலைய வாங்குவோம், அப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்" என்று அதிவிரைவு வண்டிபோல முடித்தாள்.

"எல்லாம் சரிதான், உங்க அப்பா, அம்மா முக்கியமா உங்க அண்ணன் நெனச்சா, சமத்துவம் நகர் சின்னபின்னமாகிறும்." என்றான்.

"எதையும் யோசிக்காத, நல்ல படிப்போம், நாம வேல வாங்கன பின்னாடி அன்னைக்கு எப்படியிருக்குதுன்னு பாத்துட்டு முடிவெடுப்பம், இப்பத்த நெலமைக்கு நாம காதலர்கள், சரியா, போய் படி" என்று இயல்பு மாறாமல் சொல்லிவிட்டுச் சென்ற சரோஜாவைப் பார்த்து வாயடைத்து அமர்ந்திருந்தாள் லட்சுமி.

மூன்றாமாண்டு இறுதித் தருவாய் நாட்களில் ஒருநாள் மூவரும் நின்று சிரித்துப் பேசிக்கொண்டிருந்ததை யுவன் பார்த்துவிட்டான். சரோஜாவின் மேல் அடக்கமுடியாத கோபம் ஏற்பட்டது. என்ன செய்வது என்று தெரியவில்லை. சரோஜா வீட்டிற்குப் போனதும் யுவன் அவளை அழைத்துப் பேசினான்.

"என்ன நீங்க மூணு பேருந்தான் நண்பர்களா"

இதுவரை அண்ணன் பேசாத ஒரு விசயத்தை இன்று பேசுவதை நினைத்து, வியப்புடன் ஆமா, இன்னும் சிலரு இருக்காங்க" என்றாள்.

"அப்படியா, அவங்கள ஒருநாள் வீட்டுக்குச் சாப்பிடக் கூப்டுவா" என்று சொல்ல, சரோஜாவுக்குத் திக்கென்றிருந்தது. இவன் மாறிவிடுவதற்கு துளியும் வாய்ப்பில்லை. இருந்தாலும் இவன் வாயிலிருந்து இப்படியொரு வாக்கியமா?" என்று நின்றிருந்தவளை, "இங்க பாரு, எனக்கு உன்ன ரொம்ப புடிக்கும், உன்ன நா எப்படி பாத்துக்குறேன்னு உனக்குத் தெரியும், உனக்குப் புடிச்சவங்கனா எனக்கும்தான், நா இப்பெல்லா அவங்க கீழ, நா மேலன்னு பாக்குறது கிடையாது." என்றான். இவளுக்குப் பூரண நம்பிக்கை இல்லையென்றாலும், "அப்பா, அம்மா ஒத்துக்கணுமல்ல" என்று இழுத்தாள். "நானே ஒத்துக்கிட்ட, அவங்க ஒன்னும் சொல்லமாட்டாங்க, நீ கூட்டீட்டு வா" என்று சொல்லி முடித்தான்.

அடுத்த நாள் லட்சுமி விடப்பிடியாக மறுத்தாள். சாரோஜாவும் விடாப்பிடியாக அவர்களை சம்மதிக்க வைக்க முயற்சி செய்தாள். ஒரு கட்டத்தில் முடிவு சரோஜாவுக்கு சாதகமாக அமைந்தது.

கல்லூரித் தேர்வுகள் முடிந்த கடைசி நாளில் மதியம் இரண்டு மணிவாக்கில் ராஜா மட்டும் வரப்பின்மீது நடந்து வந்து கொண்டிருப்பதை சரோஜா மாமரத்தின்கீழ் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். கருமேகக் கூட்டங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வானத்தில் ஒட்டிக்கொண்டிருந்தன.

அவன் அருகில் வந்ததும் 'டேய் அவ எங்க," என்று கமுக்கமாகக் கேட்டாள். "அம்மாவுக்கு ஒடம்பு முடியலயாமா, பாத்துட்டு பின்னாடியே வந்தர்றே, நீ முன்னாடி போனு சொல்லி அனுப்பிவிட்டா."

"சரி, டேய் இந்த மாமரத்தப் பாத்துக்க, நா வெச்ச மரம், எப்படி வளந்துருக்குனு பாத்தியா, எனக்கு போர் அடிக்கிறப்பயெல்லா இதுகூடதா பேசிட்டிருப்ப, உன்ன எப்பிருந்து காதலிக்கிறேங்கிறது இதுக்கு மட்டும்தா தெரியும்" என்றாள் கொஞ்சம் புன்முறுவலுடன்.

"அப்படியா, அப்ப எனக்கு மச்சினிச்சி" என்று சொல்லிமுடித்ததும், "சரோஜா" என்று அம்மா சத்தமிட்டபடி அவளை நோக்கி வந்தாள். "வாப்பா, நம்மூரு பைய, காலேஜ் போற, பெரிய விசயம்பா, சாப்பாடு ரெடியாயிடுச்சு, இன்னொருத்தி வரலயா" என்று கேட்டபடி அவள் சமயலறையில் நுழைந்தாள். இவன் வாசப்படிக்குள் நுழையலாமா? வேண்டாமா? என்று யோசித்தபடி நின்றிருந்தான். "உள்ள வாடா" என்று சரோஜாவின் அப்பா கரிசனையோடு அழைக்க, அவனும் உள்ளே வந்தான். இப்பொழுது எங்கு உட்காருவது. தரையிலா? நாற்காலியிலா? என்ன யோசன இங்க வா, இந்த சோபாவுல உட்காரு என்றான் யுவன்.

********************

மனிதர்கள் மாறிவிடுகிறார்கள். தவறு என்று தனக்கு போதிக்கப்பட்ட விசயங்கள் இப்பொழுது மாறி நடக்கின்றன. காலம் சரிசெய்கிறதோ என்று மனதிற்குள் அலைபாய்ந்து கொண்டிருந்தான். சாப்பாடு தயாராக டேபிள் பரிமாற காத்துக்கொண்டிருந்தது. வெளியே கருமேகங்கள் ஒன்றிணைந்து பகலுக்கு உருவம் கொடுத்துக்கொண்டிருந்தன. சரோஜா லட்சுமிக்காகக் காத்திருந்தாள். அவள் வருகை குறித்து ஏதும் தகவலில்லாததால் அனைவரும் சாப்பிடுவது என்று முடிவானது. உடல், மனம் இலகுவாகுமாறு உணவு அவர்களை அச்சமயத்தில் ஒன்றிணைத்து வைத்திருந்தது. மழை பெரிய துளிகளை பூமிக்குப் பரிமாறிக்கொண்டிருந்தது.

சாப்பிட்டு முடித்ததும் ராஜா மழையைப் பொருட்படுத்தாது கிளம்புவது என்று முடிவெடுத்து அனைவரிடமும் கூறிவிட்டு திரும்புகையில் அவன் தலையில் பெரிய இடியொன்று விழுந்தது. அது

அவனைத் தடுமாறச் செய்து நிலைகுலைய வைத்துவிட்டது. சரோஜா பெருங்கூச்சலுடன் அவனை வாரி அணைக்கப் போகையில் அவளது அம்மா அவளை உள்ளே இழுத்து தாளிட்டாள். கையில் பெரிய இரும்புக் காம்பியுடன் யுவன் நின்றிருந்தான். மழை நீர் தேங்கி ஓடும் தருவாயை அடைந்திருந்தநிலையில் அவனை வீட்டு வாசலிலிருந்து இழுத்து வந்து மாமரத்தில் அமர்ந்த நிலையில் கட்டிப்போட்டனர். சரோஜாவின் அப்பாவும், யுவனும் மாறி மாறி அடிக்கத் தொடங்கினர். சரோஜா தனது மொத்த பலத்தையும் கைக்கொண்டு அவளது அம்மாவை உதறித் தள்ளிவிட்டு ராஜாவிடம் ஓடி வந்தாள். அவளின் அப்பா இறுக்கமாக அவளை அணைத்துப் பிடித்து அருகிலிருந்து மாடு கட்டும் கயிற்றில் அவளது கைகளை இறுக்கி முடிந்தார். அவளது கண் முன்னால் அவனின் கதறல் விண்ணை முட்டி மின்னலை எழச் செய்தது. இப்பொழுது அம்மாவும் இணைந்து கொண்டு தாக்கினாள். சிறிய புல்லின் இதழ் மீது ஓயாமல் விழும் மழைத்துளியை அது எப்படி தாங்கும். அது தனது முழு ஆற்றலையும் இழுந்து மழைத்துளிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டதுபோல் ராஜாவின் குரல் இருந்தது. மாமரங்கள் அவனின் கதறலையும், சரோஜாவின் அழுகையையும் செவிமடுத்துக் கேட்டு ஆத்திரம் தாங்காமல் அவர்களின் மீது இலைகளை உதிர்த்தியது. அது அவர்களை ஒருதுளியேனும் காயப்படுத்தவில்லை. மாமரமும் தனது இயலாமையால் கண்ணீர் துளிகளைச் சிந்தின. இரண்டு மணிநேர தாக்குதலுக்குப் பிறகு அவர்கள் ஓய்ந்து போனார்கள். மேகங்கள் அழுது வற்றிப்போய் மீதமிருந்து கண்ணீர் துளிகளை சிந்திக்கொண்டிருந்தன.

“டேய் அவ இப்படியே கெடக்கட்டு, காலைல நேரமா கொண்டுபோய் வாய்க்காமேட்டுல போட்டுட்டு வந்துரு” என்று சரோஜாவின் அப்பா யுவனுக்கு கட்டளையிட்டுவிட்டு சென்றான். யுவனும் தலையசைத்து அப்பாவைப் பின்தொடர்ந்தான். அம்மா சாரோஜாவை விடுவிக்கப் போகும்போது “விடுமா அவ இந்த மழையிலு, குளிரிலு கெடக்கட்டு, அப்பதா அறிவு வரும்” என்று யுவன் சொன்னதைக் கேட்டு சரோஜா பெருங்கோபத்துடன் துடித்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருக்க மேகங்கள் மீண்டும் கண்ணீரைச் சிந்துவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தன.

இருள் அண்டிக்கிடந்தது. பெருங்காற்று வீசத் தொடங்கியது. மாமரம் சலசலத்து இலைகளில் தேங்கிய துளிகளை உதிர்த்தியது. சரோஜா தன்னால் முடிந்தளவு பலத்தைப் பயன்படுத்தி தன்னை விடுவித்துக் கொண்டாள். தனது காலில் உள்ள கொலுசை மெதுவாகக் கலட்டி வைத்துவிட்டு ராஜாவை நோக்கி அந்த இருளில் இடரி இடரி சென்று அவனையும் விடுவித்தாள். அவன் முழு பலத்தையும் இழந்து பஞ்சுபோல மாறிப்போயிருந்தான். சரோஜா தீர்க்கமாக ஒரு முடிவெடுத்தாள். அவனை தனது முதுகில் மூட்டை போல் தூக்கி கிடத்திக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள். கிட்டத்தட்ட பத்து கிலோமீட்டர் அவனை முதுகில் சுமந்தவாறு வந்து விடிவதற்குள் ரயில் ஏறி கிளம்பிவிட்டனர். அவனை இவ்வளவு தூரம் முதுகில் சுமந்துவர என்னால் எப்படி சாத்தியப்பட்டது என்று எண்ணிக்கொண்டே பயணித்தாள்.

********************

மூவரின் உடலும் மருத்துவனைச் சடங்குகள் முடிந்து வீட்டிற்கு வருவதற்கும் சரோஜா வருதற்கும் சரியாக இருந்தது. சரோஜாவைக் கண்டதும் அனைவரும் திகைத்து நின்றனர். அவள் இப்பொழுது வட்டாச்சியர். ராஜாவும் வட்டாச்சியர். யாரும் எதையும் பேசவில்லை. நேராக வீட்டிற்குள் வந்தவள் மூவரின் உடலையும் ஒருமுறைப் பார்த்துவிட்டு எந்தச் சலனமும் இல்லாமல் மாமரத்தின் கீழ் வந்து அமர்ந்துகொண்டாள். லட்சுமி பக்கத்து ஊரில் கிராம நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றுகிறாள். அவளும் அங்கு வந்து சம்பிரதாயக் கடனை நிறைவேற்றினாள். அன்று அவள் வராததை நினைத்து சரோஜா நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

மனிதர்கள், மனித இனத்துக்கு ஒவ்வாத ஒரு விசயத்துக்காக ஏன் இப்படி வெறிகொண்டு அலைகிறார்கள். சக மனிதனை புரிந்து கொள்ளாதவன் எப்படி ஒரு மனிதனாக இருந்துவிட முடியும். அன்புணர்ச்சியற்ற சமூகத்தை வளர்தெடுப்பதில் என் அண்ணனைப்போன்றவர்களுக்கு என்ன இலாபம் கிடைத்துவிடப்போகிறது. இதோ தனது சாதிக் காட்சியின் செயலாளர் பதவி போட்டியில் சொந்த சாதியினரே இவனை வீழ்த்திவிட்டனர். அப்பா, அம்மா. ஒரு மனித உயிரினத்தை உலக்கிற்கு கொண்டுவரும் ஊற்றல்லவா. கொண்டுவந்ததற்காக அந்த உயிரினத்தின் முழு உரிமையையும் தனது பிடிக்குள் கட்டுப்படுத்துவது முட்டாள்தனமல்லவா? ஏன் இவர்களுக்கு மனிதர்களைவிட சாதி, ஆணவம் அவசியமென்று தோன்றுகிறது. அது அவர்களை இப்போது உயிர்ப்போடு வைத்து விட்டதா? எனக்கு ஏன் கண்ணீர் வரவில்லை? அன்று இரவோடு வற்றி மறைந்த போன கண்ணீர். இன்றுவரை வந்ததில்லை. உங்களுக்காக நிச்சயம் வராது' என்று யோசித்தவாறு அண்ணாந்து பார்த்தால் மாமரம் பூக்கத் தொடங்கியிருந்தது.

காவலர் ஒருவர் சரோஜாவிடம், “மேடம், என்ன நடந்துச்சுன்னு உங்களுக்குத் தெரிஞ்சுருக்கும். கேஸ் குடுக்குற ஐடியா இருக்கா?” என்று கேட்க,

“இவர்களைக் கொன்றவர்களுக்கு, இன்னொருவன் சதி தீட்டிக் கொண்டிருப்பான்” என்று சொல்லிவிட்டு, “காலம் தவறுகளைத் திருத்திக்கொள்ள வாய்ப்பு கொடுக்கிறது. பயன்படுத்தாவிட்டால் அது நம்மை தின்று விடுகிறது” என்று சொல்லிவிட்டு திரும்பிப்பார்க்காமல் அங்கிருந்து வெளியேறினாள் சரோஜா.

**ஆய்வுக் கட்டுரை**

**கார்த்திக்**

# தலித்திய நோக்கில் 'ஒரு சவரக்காரனின் மயிருகள்' கவிதைத்தொகுப்பு

முன்னுரை:

இந்திய வரலாற்றில் சாதி முறையில் ஒடுக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த மக்களில் சிலரும், மராட்டியத்தில் வசிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களும், எழுபதுகளில் தங்கனைத் தலித் என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர். 'தலித்' என்ற மராத்தியச் சொல்லுக்கு உடைந்து போனவர்கள்' என்று பொருள். பின்னர், இந்தப் பெயர் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலைத்துவிட்டது.

மராட்டியத்திலும், கர்நாடகத்திலும் தலித் மக்களைப் பற்றிய இலக்கியங்கள் 'தலித் இலக்கியம்' என்ற பெயரில் தோன்றி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் இலக்கியத்திலும் தலித் இலக்கியம் கால் பதித்தது.

தலித் இலக்கியம் என்பது தலித் இலக்கியத்தால் மட்டுமே வரையறுக்கப் படவில்லை. சாதிப்போராட்டங்கள், சமூக நீதிக்கான இடஒதுக்கீட்டுக் கிளர்ச்சிகள், பொருளாதார சமத்துவத்தைப் பற்றிய பேராட்டங்கள், அரசியல் கிளர்ச்சிகள் ஆகியவற்றோடு ஒன்றாகவே தலித் இலக்கியம் எழுந்துள்ளது என ராஜ் கௌதமன் வரையறுக்கிறார். அந்த வகையில் கலைவாணன் இ.எம் எஸ் அவர்களின், "ஒரு சவரக்காரனின் கவிதை மயிருகள்" என்ற கவிதை தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் ஒடுக்குமுறை, தீண்டாமை, ஆதிக்கம், மீறல் ஆகிய தலித்தியக் கூறுகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலித் -சொற்பொருள் விளக்கம்:
தலித் என்ற சொல் "தல்" என்ற எபிரேய மொழிச் சொல்லில் இருந்து வந்ததாக கருதப்படுகிறது. விவிலியத்தை இந்தியில் மொழிபெயர்க்கும் போது தல் என்ற எபிரேய மொழிச் சொல்லுக்குத் தலித் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இதுவே மராட்டிய மொழிக்குச் சென்று அங்கிருந்து தமிழுக்கு இன்று வந்துள்ளது. தல் என்ற எபிரேய மொழிச்சொல் தமிழ் விவிலியத்தில் ஏழைகள் என்று மொழியாக்கம் பெற்றுள்ளது. தலித் என்ற சொல்லுக்கு மராட்டிய மொழியில் பள்ளம் என்பது பொருளாகும். இது இடவாகுப் பெயராக நின்று பள்ளத்தில் வீழ்த்தப்பட்டவர், பள்ளத்தில் வாழ்பவர் என்று பொருள்தரக்கூடியது.



யாரெல்லாம் தலித்

தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், இறுதியாக அரசியல் பொருளாதார ரீதியிலும், மதத்தின் பெயராலும் சுரண்டப்படும் அனைவருமே தலித்துகள் தான். அந்த வரிசையில் நாவிதர்கள், வண்ணார்கள் போன்ற சேவை சாதியினரும் இடம் பெறுவர். ஒரு உயர் சாதியினர், தாழ்ந்த சாதியினரை ஒடுக்குவது அல்லது ஆதிக்கம் செலுத்துவது. தலித் என்பது சாதி வரிசையில் கடைகோடியில் இருக்கும் மக்களைக் குறிக்கின்றது.

தலித்தியம் விளக்கம்

தலித்தியம் என்பது கடைகோடியில் இருக்கும் மக்கள், தங்களை சாதிக் கொடுமையிலிருந்து விடுவித்துக் கொள்ள மேற்கொள்ளும் போராட்டங்களையும், போராட்டங்களுக்குத் தேவைப்படும் தத்துவங்களையும், கருத்துக்களையும் சுட்டி நிற்பது ஆகும். இந்தியாவிலுள்ள தீண்டாமை மற்றும் சாதி அமைப்பின் கொடுமையான சுரண்டல் முறையினை அறிதலை நோக்கி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தலித் இலக்கியம்.
தலித் இனம் ஒரு சாதியல்ல: அது ஒரு உணர்வுபூரனமான புரிதல்: பட்டறிவு, மகிழ்ச்சி, துயரம், போராட்டம் ஆகியவற்றோடு தொடர்புடையது. அது ஒரு கலகக் கோட்பாடு, அதன் மூலம் விடுதலையச் சாதித்தல்.

தலித்திய ஒடுக்குமுறை:

தாழ்த்தப்பட்ட சாதியினரை உயர் சாதியினர், தங்களது அதிகாரத்தினாலும், பொருளாதாரத்தினாலும் இழிவுப் படுத்த நினைப்பது. கவிஞர் இ.எம்.எஸ்.கலைவாணன்,

பிச்சையெடுத்தாலும்
பார்பர் ஷாப் வேலைக்கு
போக கூடாதுன்னு
சொல்லிட்டா அம்மா
லாரில கிளியா இருக்கும் போது
விருதுநகர் பஸ்டாண்டு
குளிரும்ல
நான் குளிச்ச பொறவு
நீ குளில் நாசுவ தாயிளின்னுட்டு

என்னை வெளிய வரசொல்லி
டிரைவர் குளிக்கப் போனான்

என்று நாவித சமுதாயத்தை சேர்ந்தவரை இழிவுபடுத்திய நிகழ்வை தன் கவிதையில் பதிவு செய்துள்ளார்.

திருமணத்திற்கு நாவித சமூகத்தைச் சார்ந்த ஒருவர் தனது அம்மாவுடன் செல்கிறார். அப்பொழுது பந்தியில் அமர்ந்திருக்கும் பொழுது அங்கிருந்த உயர்சாதியினர் அவர்களை இழிவு படுத்திய நிகழ்வை,

களை கட்டியிருந்தது
பிச்சாண்டி ஆசாரியரின்
கல்யாண வீடு
முதல் பந்தியில
பக்கத்து கோவிந்தன் நாயர்
முதல் பந்தியில
பக்கத்து கோவிந்தன் நாயர்
இப்பவே யாம்புல இருந்தியன்னு
சோறு விளம்புன ஞானபிறகாசம்
ஒடுங்கல நாசுவ தாயளின்னு
எழுப்பி விட்டான்
என்னையும் என் அம்மாவையும்
எல்லா விசேஷ வீட்டுலயும்
ஒரு ஞானபிறகாசம் இருப்பான்
எங்களை
விரட்டி விடுகதுக்கு (பக்கம் 18)
உணர்வுபூர்வமாக பதிவு செய்துள்ளார்.

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படையானது உணவு அதிலும் கூட உயர் சாதியினரின் அதிகாரம் காண்பிக்கப்பட்டுள்ளது.
தலித்திய நாவலாசிரியர்களில் ஒருவரான பாமா, தனது கருக்கு நாவலின் முன்னுரையில்,
வாழ்க்கையின் பல நிலைகளில் பனங்கருக்குப் போல என்னை அறுத்து ரணமாக்கிய நிகழ்வுகள், என்னை அறியாமையில் ஆழ்த்தி முடக்கிப் போட்டு மூச்சு திணற வைத்த அதீத சமுதாய அமைப்புகள், இவற்றை உடைத்தெறிந்து அறுத்தொழித்து விடுதலை பெறவேண்டும் என்று எனக்குள் எழுந்த சுதந்திரப் பிரளயங்கள். இவை சிதறடிக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எனக்குள் கொப்பளித்துச் சிதறிய குருதி வெள்ளங்கள் எல்லாம் சேர்ந்ததுதான் இப்புத்தகத்தின் கரு.'
எனக் குறிப்பிட்டிருப்பார். அது போன்ற உணர்வேயே கலைவாணனின் இக்கவிதையும் வெளிப்படுத்தியுள்ளது. தனது உணர்வுகளை கவிதையாக வடித்துள்ளார்.
மற்றொரு கவிதையில் ஒரு மனிதன், தனது வாழ்க்கையை மேம்படுத்துவற்கு இன்றியமையாதது கல்வி. அனைவரும் சமம் என்று கூறும் ஆசிரியரும் கூட நாவிதன் என்னும் தொழிலை வைத்து சாதி பிரிவினை ஏற்படுத்தி இழிவுபடுத்துகின்றார். இதை,

படிப்பு வரலைன்னா
உங்கப்பன் கூட
செரைக்க போக வேண்டியது
தானலேன்னு
கூரை பள்ளி கூடத்த மொழுவ
சாணங்கி பொறக்க
அனுபிவச்ச
நடாராஜ பிள்ளை வாத்தியாரை
அன்னைக்கு ஒரு நாளு
செயர்ல இருத்தி வச்சு
அப்பா ஷேவ் பண்ணுகாரு
கிருதால இருந்து
கத்தி கீழ இறங்கி
கழுத்துக்கு கிட்ட வரும்போது தோணுகு
அப்படியே வச்சு
ஒரு இழுப்பு இழுத்தர மாட்டாரான்னு
தாயினி சாவட்டும்.. (பக்கம் 16)
என்று கலைவாணன் தனது கவிதையில் இவ்வாறு பதிவு செய்துள்ளார். இது போன்ற கவிதைகளின் மூலம் ஆசிரியர் தனது சொந்த வாழ்க்கையில் நடந்த மனகுமுறல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

தீண்டாமை:

தீண்டாமை என்பது சாதி மற்றும் தொழில் அடிப்படையில், மக்களை சில குழுக்களாகப் பாகுபடுத்தி, அவர்களுக்கு சம உரிமைகளை வழங்காமல் தடுக்கும் முறை. தீண்டாமை என்றால் தொடாமை என்பது பொருள்.
செத்த வீட்டுக்கும்
பார்பர்ஷாப்புக்கும்
போனவங்க
குளித்த பிறகுதான்
வீட்டுக்குள் வரணும்
ஒட்டிய
முடிகள் போவதற்கும்
நாசுவன் தொட்டதற்கும். (பக்கம்17)
முடி வெட்டிய பிறகு உடனடியாக குளிப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். நமது உடலில் ஒட்டியிருக்கும் சிறு முடிகளை கூட உடனடியாக சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும். காரணம் நமது உடலில் இந்த வெட்டப்பட்ட முடிகள் பாக்டீரியாக்களுக்கு உணவாக மாறிவிடும். ஆனால் நாவிதர் தொட்டு விட்டான் என்று குளிக்கும் சில உயர் சாதியினர் இப்பொழுதும் நம் சமூகத்தில் காணப்படுகின்றனர்.
மற்றொரு கவிதையில் ஆதிக்க சாதியினரின் வீட்டின் முன் வாசலில் நாவிதன் வந்தால் தீட்டு என்று பின் வாசலில் வழியாக வரச் சொல்வதைப் பற்றித் கூறுகிறது.
காலைல
முடிவெட்டி அக்குள் வழிக்க சொன்ன
சொக்கலிங்க செட்டியாரு
டேய்னு கூப்பிட்டா வீட்டைச்சுத்தி
பொற வாசல் வழியா வந்து
கையெடுத்து கும்பிட்டு
சொல்லுங்க சாமின்னு தான்
சொல்லணும். (பக்கம் 71)
என்று மேல் சாதியினர், நாவித சமுதாயத்தினரை எவ்வாறு நடத்துகின்றனர் என்பதை பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

ஆதிக்கம்:

ஆதிக்க சாதியினரின் பொருளாதார சுரண்டல், பண்பாட்டு அடக்குமுறை என்பனவற்றை ஆதிக்கம் எனலாம் ஆதிக்க சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நாவிதர்களும் மனிதர்கள் தான் என்று எண்ணுவதில்லை. ஒரு சவரத் தொழிலாளிக்கு வாழ்வாதாரம் என்பது அவர்களுக்கு கிடைக்கும் கூலியைப் பொருத்து அமையும். அதிலும் கூட சுரண்டப்படுகிறார்கள் என்பதை.

சபரிமலை
சப்பி போட்ட பளங்கொட்டை மாதிரி
தலைமுடியும் தாடியுமா வந்த
தங்கப்பன் நாயரை
வரணம் வரணம்னு சொல்லி
பல்லுகாட்டி
செயர்ல இருத்தி
முன்னால கொஞ்சம் முடிவிட்டு
சைடெல்லாம் பொடியா வெட்டி.....
அவரு சுருட்டி கொடுத்த
அஞ்சு ரூபாய
அப்பா முதுகு வளைஞ்சு
வாங்கும் போது
ராஜ ராஜ சோழன் சிலைய செய்தவன்
பிச்சையெடுத்தது போல இருந்தது (பக்கம்22)

இவ்வாறு வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

ஒரு பிரிவினர் வேறொரு பிரிவினராக மாற முடியாத நிலையையும், பிறப்பினால் சாதி நிர்ணயிக்கபடுகிறது என்பதையும், அதை பற்றிய ஆதிக்கத்தையும் கவிஞர் மற்றொரு கவிதையின் மூலம் கூறுகிறார்.

பாண்டியனுக்க
பழக்கடையில வச்சு
நான் பழம் வாங்குக
கடையில் தான்
நாசுவ பயலுக்கும் வாங்கணுமான்னு
அக்கானி குமாரதாசு
கேட்டதுனால
வாழைப்பழ குலைய
தூக்கி அடிச்சான்
புலிப்பனம் வெள்ளை குமாரு
போலீசுக்கு போயும்
பிரயோஜனம் இல்லாதுனால
அரேபியாக்கு ஓடி போனாள்
ஆறு வருஷம் கழிச்சு
காரும் வாங்கி
மேட்டுக்கடை முக்குல
இப்ப ஹோட்டலுவச்சிருக்கான்
அன்னா
இட்லி தின்னுட்டு போற
வேலப்பன்
சொல்லிட்டு போறான்
நாசுவலுக்க சட்னியில
அஞ்சாறு மயிரு கிடக்குனு. (பக்கம்24)

மீறல்:

சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் அதிகாரம் நீக்கமற நிறைந்து கிடக்கிறது. அந்த அதிகாரம் தலித்துகளுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டது. இந்த ஆதிக்க கருத்தாக்கங்களை சிதைத்தழிக்க முயலுகிறது தலித்திய எழுத்து முறை. அது மீறலை ஆன்மாகவாக கொண்டுள்ளது.

எப்பொழுதுமே தனக்கான மொழியை உருவாக்காமல் தனக்கான அழகியலை வடிவமைக்க முடியாது என்பதை உணர்ந்து தலித் இலக்கியம் உயிரோட்டமுள்ள பேச்சு மொழியை, அதனுடைய எல்லாவிதமான கூறுகளோடும் பயன்படுத்த முயலுகிறது. பேச்சு மொழிதான் உண்மையான தாய்மொழி, எழுத்துமொழி, செய்கைமொழி. அதிகார வர்க்கம் அதிகாரம் செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட மொழி பொதுமொழி, மொழியைக் கையாளுவதிலும் தலித் இலக்கியம் தனித்து இயங்குகிறது. தடுக்கப்பட்ட வார்த்தையாடல்களை உச்சரிக்கக் கூசுகின்ற உயிர்ச் சொற்களை எல்லாம் கவனத்தில் கொண்டு தலித் இலக்கியம் படைக்கப்படுகிறது. இதன் மூலம் அறியப்படாதிருந்த, கவனிப்பாரற்றுக்கிடந்த ஒரு மூடுண்ட உலகம், தமிழ் வாசகர்களின் முன் வரித்துப்போடப்பட்டிருக்கிறது என்கிறார் க.பஞ்சாங்கம். (இன்றைய இலக்கியம் என்பது தலித் இலக்கியமே,பக்-1)

இந்த வகையில் கலைவாணன் அவர்கள் தாயிளி, மயிரு, போன்ற கெட்ட வார்த்தைகளை பல கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார். கெட்ட வார்த்தை பேச வேண்டும் என்பது கவிஞரின் நோக்கம் அல்ல. அந்த வார்த்தைகளை ஆதிக்க சாதியினர் அவர்களை அதிகாரம் செய்வதற்கும். ஒடுக்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள் என்பதை காண்பிப்பதற்கும், அவற்றை பயன்படுத்தி வாசகர்களின் கவனத்தை பெற வேண்டும் என்பதும், அதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பது அம்மக்களின் தேவையாகும்.

முடிவுரை:

இ.எம்.எஸ். கலைவாணனின் கவிதைகள் தலித்தியக் கூறுகளைப் பேசும் ஒரு களமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கவிதையிலும், தலித்தியக் கூறுகளோடு நாவிதர்களின் வாழ்க்கை நிலை, சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் அவமானங்கள், வேதனைகள், சிக்கல்கள், ஆதிக்க சாதியினரின் கொடுமைகள், போன்றவற்றை ஆசிரியர் தனது சொந்த அனுபவத்தில் நின்று அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை உணர முடிகிறது.

தலித் படைப்பாளர்கள் தலித் மக்களின் வாழ்வியல் சிக்கல்களை இடக்கரடக்கல் இல்லாமல் முரட்டுத்தனத்துடன் நையாண்டிக் கலந்த சொல்லாடல்களுடன் படைத்து வருகின்றனர் என்பதற்கு இக்கவிதை பொருத்தமாக அமைகிறது.

பயன்படுத்தப்பட்ட நூல்கள்:

ஒரு சவரக்காரனின் கவிதை மயிருகள்- கலைவாணன் இ.எம்.எஸ்.
இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்- முனைவர்.க.பஞ்சாங்கம்
இன்றைய இலக்கியம் என்பது தலித்திய இலக்கியமே- முனைவர்.க.பஞ்சாங்கம்

## അവലോകനം

### സീമ രാജ് ശങ്കർ

# ശ്രീവത്സന്റെ മാധുര്യം




ശ്രീ. ടി. ശ്രീവത്സൻ എഴുതിയ മുപ്പതു കഥകൾ എന്ന കഥാ സമാഹാരത്തിലെ മുപ്പത്തിയൊന്നു കഥകളും ഞാൻ വായിച്ചുവെങ്കിലും, എന്റെ മനസ്സിനെ തെല്ലൊന്ന് ചിരിപ്പിക്കുകയും, വേദനിപ്പിക്കുകയും, ചിന്തിപ്പിക്കുകയും ചെയ്ത കഥയിലൂടെ സഞ്ചരിച്ചതിന്റെ ഒരു ലഘു വിവരണം മാത്രമാണിത്.

ഇതിലെ ആദ്യത്തെ കഥ 'ന്റെ ' എന്നതാണ്. ആഗ്രഹാര തെരുവിന്റെ പശ്ചാത്തലത്തിൽ നാം പലപ്പോഴും കണ്ടുമറന്ന ചില വ്യക്തിത്വങ്ങളെ ഓർമിപ്പിക്കുന്നു 'ന്റെ '. പ്രധാന കഥാപാത്രങ്ങളായ ബുദ്ധിമാന്ദ്യമുള്ള അട്ടുകൃഷ്ണനും, മനോരോഗിയായ രംഭയും നമ്മുടെ മനസ്സിനെ തെല്ലൊന്ന് കരയിക്കുന്നുവെങ്കിലും, കഥാവസാനം രംഭയുടെ നിർബന്ധത്തിന് വഴങ്ങി അവർ ഒന്നായിത്തീരുന്നതുമാണ് കഥാസാരം. ഈ കഥയെ ഒ. ചന്തുമേനോന്റെ ഇന്ദുലേഖ യിലെ കഥാസന്ദർഭവുമായി കോർത്തിണക്കിക്കൊണ്ട് കഥാകാരൻ നമ്മെ വിസ്മയിപ്പിച്ചിരിക്കുന്ന രീതി അഭിനന്ദനാർഹമാണ്. 'വത്സൻ' എന്ന കഥയിൽ നൂലാമാല എന്ന് ഇരട്ടപ്പേരുള്ള ഒരു ഗുണ്ടയുടെ ജീവിതത്തിലുണ്ടായ അനുഭവത്തെ നർമ്മത്തിൽ ചാലിച്ചു വായനക്കാരന് സമ്മാനിച്ചിരിക്കുന്നു. "ഡൈ ഇൻ ഹാർനെസ് 'എന്ന കഥ അഭ്യസ്ത വിദ്യയും, സുന്ദരിയും, വിധവയുമായ ഒരു സ്ത്രീയുടെ അതിജീവനത്തിന്റെ കഥ ഹൃദയസ്പർശിയായ വരികളിൽ പരാമർശിച്ചിരിക്കുന്നു. തന്റെ ഭർത്താവിന്റെ കമ്പനിയിൽ ജോലി തരാക്കാനുള്ള ഇന്റർവ്യൂ അറ്റൻഡ് ചെയ്യുമ്പോൾ അപ്രതീക്ഷിതമായി ആ പെൺകുട്ടിക്ക് നേരിടേണ്ടി വന്ന ദുരനുഭവമാണ്കഥാസാരം. ഒരു സ്ത്രീ എന്നും നിസ്സഹായയും നിശ്ശബ്ദയുമായി മാറേണ്ടി വരുന്നുവെന്ന് കഥാകരൻ ഊന്നിപ്പറയും പോലെ തോന്നി. നിഷ്കളങ്കയായ,ജാതിമത ഭേദങ്ങളൊന്നുമില്ലാതെ കലർപ്പില്ലാത്ത സ്നേഹം മാത്രം മനസ്സിൽ സൂക്ഷിക്കുന്ന മധ്യവയസ്കയായ പാത്തുമ്മയെന്ന സ്ത്രീയുടെ കഥ പറയുന്നു 'പാത്തുമ്മയുടെ ആട് '. കഥാ നായികയുടെ കാഴ്ചപ്പാടുകളെയും വിശ്വാസങ്ങളെയും സാധാരണ കാണാറുള്ളതുപോലെ ഒരു അധ്യാപകൻ എന്ന നിലയിൽ തിരുത്തികൊടുക്കുവാനുള്ള തന്റെ ഉദ്ദേശ്യത്തെ വളരെ സ്നേഹപൂർവ്വം ഉപേക്ഷിച്ച് പടികളിറങ്ങുന്ന മാഷിന്റെ നന്മമനസ്സ് എനിക്ക് നന്നേ ബോധിച്ചു.

മൈസൂർ ബാംഗ്ലൂർ റൂട്ടിലോടുന്ന നോൺസ്റ്റോപ്പ് ബസ്സിൽ യാത്ര ചെയ്യുന്ന കഥാകാരൻ തന്റെ സഹയാത്രികനോട് കൂടുതൽ അടുക്കുന്നതും, അയാളോടൊപ്പം ഒരു മുറിയിൽ സംസാരിച്ചിരിക്കുന്നതും, അവസാനം അയാൾ ഒരു മനോരോഗിയാണെന്ന് തിരിച്ചറിയുമ്പോൾ അയാൾക്കുണ്ടാകുന്ന മാനസിക സംഘർഷങ്ങളുമാണ് 'ചെറുകഥ'യിൽ. മുറിവിട്ടിറങ്ങുന്ന അയാളെ പിന്തുടരുന്ന ഒരു വാണിഭക്കാരൻതനിക്ക് മുന്നിലേക്കുള്ളിവിടുന്ന പെൺകുട്ടിയോട് സാറിനൊരു പാട്ടു പാടി കൊടുക്കുവെന്ന് പറയുന്നു.ആ കുഞ്ഞ് പാടുന്ന എവിടെയൊക്കെയോകേട്ടുമറന്ന ആ പാട്ട് ഒരു വേള എന്നെ ഓർമയുടെ പിന്നമ്പുറങ്ങളിലേക്ക് വലിച്ചു കൊണ്ടുപോയപോലെ ഒരു തോന്നൽ. ഇരുട്ടിന്റെ ഭയാനകത്വത്തെ വെളിവാക്കുന്ന

ചെറുകഥ ' വായനക്കാരനെ ശരിക്കും വേദനിപ്പിക്കുന്നതാണ്. എല്ലായ്പോഴും സാരോപദേശകാഥകൾ കേട്ടു തഴമ്പിച്ച നമുക്കു വേറിട്ട ഒരു വായനാനുഭവം നൽകുന്നു ശ്രീവത്സൻ സാറിന്റെ 'നി സ്സാരോപദേശ കഥകൾ "ബസ്സ്യാത്ര ചെയ്യുന്ന രണ്ടു ചെറുപ്പക്കാരുടെ സംഭാഷണം ഇതിവൃത്തമായി രചിച്ചിരിക്കുന്ന ഈ കഥയിൽ, ഒരേ മാനസ്സിക തലത്തിൽ സഞ്ചരിക്കുന്ന മനുഷ്യർക്ക് സംസാരിക്കുവാൻ വിഷയ ദാരിദ്ര്യം

തീരെയുണ്ടാവില്ല എന്ന് പറയാതെ പറഞ്ഞിരിക്കുന്നു കഥാകാരൻ. മൃഗങ്ങളുടെ വാലിൽ തുടങ്ങി, ചർച്ച പിന്നീട് സ്ത്രീകളുടെ മുടിയെക്കുറിച്ചും, അവരുടെ ബ്ലൗസ്സിലേക്കും, സിന്ദൂരരേഖയിലണി യുന്ന കുങ്കുമപൊട്ടും, ഒരു സഹയാത്രികയുടെ തലയിൽ നിന്നും ഊർന്നു വീണ കാനകാംബരവും മുല്ലപ്പൂവും ചേർത്തു കെട്ടിയ മാലയും വരെ ചർച്ചാവിഷയമാവുന്നത് നമ്മെ രസിപ്പിക്കുന്നുണ്ട്. തലയിൽ നിന്നും താഴേക്കു വീണ പൂ മാലയെഷൂ കൊണ്ട് ചവുട്ടിയരച്ചാലോ എന്നു പോലും ചിന്തിക്കുന്നു ഒരുവൻ. അങ്ങനെ ഈ ചെറുപ്പക്കാരുടെ ഭ്രമാത്മകമായ ചിന്തകളെ രസകരമായി എഴുതിയിരിക്കുന്നു 'നിസ്സാരോപദേശകഥ 'യിൽ.

'അലക്സാണ്ടർ ചക്രവർത്തിയുടെ ശവപ്പെട്ടി ' എന്ന കഥയുടെ തുടക്കം തന്നെ ഒരു വ്യക്തി ചരിഞ്ഞു കിടക്കുമ്പോൾ അയാളുടെ ഒരു കയ്യുടെ അപ്രാധാന്യത്തെക്കുറിച്ചുള്ള സംശയത്തോടെയാണ്. സത്യത്തിൽ ഞാനും പലപ്പോഴും ചിന്തിച്ചിട്ടുണ്ട് ഈ കൈ യെ കുറിച്ച്. ചില നിർബന്ധങ്ങളുള്ള, അടുക്കും ചിട്ടയും ആവശ്യത്തിലധികമുള്ള അശോകൻ എന്ന വ്യക്തിയുടെ പെരുമാറ്റരീതികളോട് പൊരുത്തപ്പെട്ടുപോകുന്ന രാധിക യെന്ന ഭാര്യയുടെ വിരക്തിയാലുള്ള ജീവിതത്തെ ഈ കഥയിൽ നമുക്ക് കാണാം. വളരെ പരിമിതമായ ജീവിത സൗകര്യങ്ങളിൽ ഒതുങ്ങി കഴിയുന്ന അശോകൻ എപ്പോഴും ഒരു യാത്രക്കൊരുങ്ങിയിരിക്കുന്നവനെ പോലെ തോന്നുന്നു. മരണമെന്ന യാഥാർത്ഥ്യത്തിനായുള്ള കാത്തിരിപ്പാണോ എന്ന് സംശയം തോന്നി എനിക്ക്. അശോകന്റെ ഓർമയിൽ തെളിഞ്ഞു കാണുന്ന 'ഇറങ്ങിയോട്ടം ', ശിവകാശി യെന്ന വ്യവസായ നഗരത്തിലെ പല കെട്ടിടങ്ങളിൽ നിന്നും പുറത്തേക്കു വെട്ടുക്കിളികളെപ്പോലെ ഇറങ്ങിയോടുന്ന കുഞ്ഞുങ്ങൾ കാലങ്ങൾക്ക് മുന്നേ നിലനിന്നിരുന്ന ദയനീയമായ ബാലവേല യെ ഓർമിപ്പിച്ചു. അശോകന്റെ ഉറക്കമില്ലാത്ത രാത്രികളിൽ അയാളുടെ ഓർമയിൽ തെളിയുന്ന മറ്റൊന്നാണ് സ്റ്റേജിൽ ഒരു മജീഷ്യൻ പെട്ടിക്കുള്ളിൽ കയറിയ ഒരു മനുഷ്യനെ രണ്ടായി മുറിച്ചു മാറ്റുന്നതിനും , പിന്നീട് ജീവൻ നൽകുന്നതിനും സാക്ഷികളായി, മനുഷ്യത്വരഹിതമെങ്കിലും ആ പ്രവൃത്തിയെ ക്ഷമയോടെ കാത്തിരിക്കുന്ന കാണികളുടെ മനസ്സിനെ അദ്ദേഹം എത്രമാത്രം സ്വാധീനിച്ചിരിക്കുന്നു എന്നത് അത്ഭുതമായി വർണ്ണിച്ചിരിക്കുന്നു. വർഷങ്ങളോളം വെട്ടിപ്പിടിച്ചു ശേഖരിച്ചു വയ്ക്കുന്നതെല്ലാം ഒരു നിമിഷം കൊണ്ട് മരണം കവർന്നെടുക്കുമ്പോഴുണ്ടാകുന്ന ഒരു പിടച്ചിലിനെക്കുറിച്ച് അദ്ദേഹം പരാമർശിച്ചിരിക്കുന്നു. കഥയുടെ അവസാനവും കയ്യിലേക്കൊരു മടക്കം. അദ്ദേഹം ഇങ്ങനെ എഴുതിയവസാനിപ്പിച്ചിരിക്കുന്നു. ശവപ്പെട്ടിയുടെ അവസാനത്തെ ആണിയടിച്ചതിനുശേഷം രണ്ടു കൈകളും പുറത്തേക്ക് ഇട്ടത് കാണാമായിരുന്നു. അതിൽ ഒരു കൈ അത്രയ്ക്ക് രോമാവൃതവും ദൃഢവുമായിരുന്നില്ലയെന്നത് ആരും ശ്രദ്ധിച്ചില്ല. ആ കൈകൾ തീർക്കുന്ന സമയം പത്തു പത്ത് ആയിരുന്നുവോ എന്ന ഒരു ചോദ്യത്തോടെ കഥയാവസാനിപ്പിച്ചു.'ചതുരംഗപ്പലകയിൽ നമ്മൾ ' എന്ന കഥയിൽ എത്ര കഠിനമായ വേദനയിലും മനുഷ്യ മനസ്സ് കരുണയാൽ നിറയുന്ന മനസ്സുകളിൽ ആകൃഷ്ടരാവുന്നുവെന്നും, അവന്റെ കാമനകൾ പ്രണയാതുരമാവുന്നതിനും തെളിവാണ് ആശുപത്രി കിടക്കയിൽ മരണം കാത്തുകിടക്കുന്ന യുവാവിന്റെ മാനോനില.ജീവിതകമാകുന്ന ചതുരംഗപ്പലകയിൽ ഒറ്റയ്ക്ക് കളിക്കുന്ന കളിക്കാരാണ് നമ്മൾ. ഇന്നും ഓരോരുത്തരും നമ്മോടു തന്നെ യുദ്ധം ചെയ്യുകയും, ജയവും, തോൽവിയും സ്വയം സൃഷ്ടിച്ചെടുക്കുന്നുവെന്നും ആവാം കഥാകാരൻ പ്രസ്താവിക്കുന്നത് എന്നാണ് എന്റെ ഭാഷ്യം.'ഇരട്ട നാവ് 'എന്ന കഥയിൽ മാതാ പിതാക്കൾ നഷ്ടപ്പെട്ട ഒരു കുട്ടിയുടെ രക്ഷിതാവായ തന്റെ മുത്തച്ഛനോടൊപ്പമുള്ള അവന്റെ ദിനാരാത്രങ്ങളും, അദ്ദേഹത്തിൽ നിന്നും അവന് ലഭിക്കുന്ന സ്നേഹവും പഴങ്കഥകളും, അവസാനം ആകസ്മികമായുണ്ടാകുന്ന അദ്ദേഹത്തിന്റെ മരണം ആ കുഞ്ഞുമനസ്സിനെ തേല്ലോന്നുലയ്ക്കുന്നതും അവന്റെ മനസ്സ് ആ മുത്തച്ഛന്റെ പരുപരുത്ത കൈകളുടെ സംരക്ഷണം കാംഷിക്കുന്നതുമാണ് 'ഇരട്ടനാവ് '. പത്രമാഫീസിലെ എഡിറ്ററുടെ നിർദേശപ്രകാരം ഒരു കലാപംപ്രദേശത്തുള്ള രശ്മി എന്നപെൺകുട്ടി യെ അന്വേഷിച്ചെത്തുന്ന പത്രറിപ്പോർട്ടർ വാർത്താ ശേഖരണത്തിനായി തന്റെ മകളെ ഒരു മാധ്യമമായി ഉപയോഗിക്കുന്ന തന്ത്രം ഒരു ഭാവന മാത്രമാണെന്ന് വിശ്വസിക്കുവാൻ ആണ് എനിക്കിഷ്ടം. 'നളിനി അല്ലെങ്കിൽ മറ്റൊരു സ്നേഹം ' എന്ന കഥയിൽ നായകൻ യാദൃശ്ചികമായി കണ്ടുമുട്ടുന്ന തന്റെ പഴയ സഹപാഠിയുടെ ഭർത്താവിന്റെ വിയോഗത്തെക്കുറിച്ചുള്ള വിവരണം തികച്ചും അസമയത്തായിരുന്നുവെന്നും, ഭർത്താവിന്റെ മരണത്തിൽ അതീവ സങ്കടത്തിൽ കഴിഞ്ഞിരുന്ന അവരുടെ ഭാഗത്തുനിന്നും അവസാനമായുണ്ടാകുന്ന അനുഭവം എന്നെയും കഥാകാരനെയും തെല്ലൊന്നമ്പരപ്പിച്ചു. ഒരു ഹോസ്പിറ്റലിന്റെ ഐ സി യു വിനു മുന്നിൽ കാത്തിരിക്കുന്ന ബൈ സ്റ്റാൻഡേർസിന്റെ പലവിധ വികാര വിചാര വിക്ഷോഭങ്ങളുടെ നേർക്കാഴ്ച്ച യാണ് 'ദയ ഇന്റർ നാഷണൽ '. രോഗികളുടെ കൂട്ടിരിപ്പുകാരുടെ ഇടയിൽ നിന്ന്

വേറിട്ട ഇടപെടലുകൾ നടത്തുന്ന ഫിറോസ് എന്ന ചെറുപ്പക്കാരന്റെ നിഷ്കളങ്കമായ സേവനവും,ത്യാഗവും, സ്നേഹവും, ഉറങ്ങാതെയുള്ള കാത്തിരിപ്പും വിശദമായി പ്രതിപാദിച്ചിരിക്കുന്നു ഈ കഥയിൽ. അവസാനം ആ ഐ സി യു വിന്റെ തറയിൽ മരിച്ചു കിടക്കുന്ന ഫിറോസ് മനുഷ്യമനസ്സിനെ ആഴത്തിൽ സ്പർശിക്കുന്ന കഥാപാത്രമാണ്. വെറ്റിലത്തിരുമേനി എന്നു പേരുള്ള ഒരു മഹാ ജ്യോതിഷിയുടർ വീട്ടു വരാന്തയിലേക്ക് കടന്നു വരുന്ന വിവിധ തുറകളിലുള്ള ഭക്തജനങ്ങളുടെ ആവശ്യങ്ങളും, ആവലാതിയും, കണ്ടറിഞ്ഞു പണം നേടുകയെന്ന ദുഷ്ടലാക്കോടുകൂടി കാട്ടിക്കൂട്ടുന്ന കപടത നിറഞ്ഞ ആചാരാനുഷ്ഠാനങ്ങളുടെ നേർക്കാഴ്ച്ചയാണ് സുദർശനം. വായനക്കാരനെ ചിരിപ്പിക്കുവാനും, ചിന്തിപ്പിക്കുവാനും വക നൽകുന്ന കഥകളാണ് 'ആംഗ്ലോ' യും 'അനുപാത'വും. പ്രണയനൈരാശ്യത്തിൽപ്പെട്ടുഴറുന്ന പവിത്രൻ എന്നാ ചെറുപ്പക്കാരന്റെ കഥ യാണ് 'ടർണ്ണറുടെ പോം *vazhi*'. ഉത്തമൻ എന്ന് പേരുള്ള ചെറുപ്പക്കാരൻ ജോലിക്കുള്ള ഇന്റർവ്യൂ നു ഡൽഹിയിലേക്ക് തന്റെ നാട്ടുകാരനും, സ്വാതന്ത്ര്യ സമരസേനാനിയുമായിരുന്ന തൊണ്ണൂറ് വയസ്സുള്ള തമ്പിയാശാനെ കൂടെ കൂട്ടുന്നതും, ട്രെയിൻ യാത്രയ്ക്കിടയിലും, അവിടെയെത്തിയതിന് ശേഷവും നടക്കുന്ന രസകരമായ സംഭവങ്ങളും, അവസാനം തമ്പിയാശാനെ അവിടെ വച്ച് കാണാതാവുന്നതും ആണ് 'അലായ് മീനാർ 'എന്ന കഥയുടെ ഇതിവൃത്തം.

ശ്രീ. ടി. ശ്രീവത്സൻ സർ പല ഇടവേളകളിൽ, പല നാടുകളിൽ സഞ്ചരിച്ച നാളുകളിൽ എഴുതിയ കഥകളായി തോന്നി എനിക്ക്. വേദമന്ത്രങ്ങൾ, ചരിത്രം, സാമൂഹിക വീക്ഷണം എന്നിവയിൽ അദ്ദേഹത്തിനുള്ള അഗാധ മായ പാണ്ഡിത്യം വെളിപ്പെടുത്തുന്ന കൃതിയാണിത്., ഭാഷയുടെ പ്രാവീണ്യം എടുത്തു പറയേണ്ടതാണ്. ഇനിയുമിനിയും സാഹിത്യ ലോകത്തിന് മുതൽക്കൂട്ടായി മാറുന്ന നിരവധി സൃഷ്ടികൾ ശ്രീ. ടി.ശ്രീവത്സൻ സാറിൽ നിന്നും ഉണ്ടാവട്ടെ എന്ന് ആശംസിക്കുന്നു.

നന്ദി, സ്നേഹം :സീമ രാജ് ശങ്കർ.

**കവിത**

**പെരിയാർ വിജയൻ**

# ശവരം

1.
മുറിച്ചു മുറിച്ചു കളയുന്നു
വെങ്കിലും
വീണ്ടും വീണ്ടും വളർന്നു
തനിയെ
മുടി
നഖം
ആശ
കാമം
വിരോധം .

2
തുടങ്ങിയ കാലത്തിൽ
അരമണിക്കൂർ ചെയ്തിട്ടും
തിരുപ്തി കിട്ടിയിരുന്നില്ല

ഇപ്പോഴൊക്കെ
അഞ്ച് നിമിഷം
ചെയ്താല് പോലും
മതിയാവുന്നു.!
തിരുപ്തി ഉണ്ടെങ്കിലും
ഇല്ലെങ്കിലും.

മുഖ ശവരം

**ஆய்வுக் கட்டுரை**

முனைவர் க. உமாமகேசுவரி

# பொறாட்டுகளி - ஒரு வட்டாரக் கலை

முன்னுரை

சமுதாயத்தின் உணர்வுவெளிப்பாடாக கலை இலக்கியங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு சமூகமும் தனக்கே உரித்தான பண்பாட்டு அடையாளங்களைத் தங்களின் கலைவடிவங்களில் வெளிக்காட்டுகின்றன. கேரள மாநிலம் பல்வேறு சமூகங்களின் கலப்பிடமாக இருந்துவருகிறது. அந்தச் சமூகங்கள் அதன் கலைவடிவங்களை இயல்பு மாறாமல் இன்றளவும் காப்பாற்றி வருவதாலேயே சர்வதேச அளவில் பேசப்படும் சிறப்பைப் பெற்றிருக்கின்றன.
கேரள மாநிலத்தை நிலவியல் அடிப்படையில் தென்கேரளம், வடகேரளம் என இரண்டாகப் பிரிக்கலாம். ஏராளமான மலைப்பகுதிகளையும் இனக்குழுக்களையும் கொண்டுள்ள வடகேரளம் கலைவளர்ச்சியில் தென்கேரளத்தைவிடச் செழுமை பெற்றது. வடகேரளத்தின் ஒரு பகுதியான பாலக்காடு மாவட்டம் அதன் தனித்த கலைவடிவங்களுக்காகப் பேசப்படும் சிறப்புடன் உள்ளது. பாலக்காடு மாவட்டத்திற்கே சொந்தமான "பொறாட்டுகளி" ஒரு கலைவடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வட்டாரக்கலை ஆகும்.

பொறாட்டு, பொறாட்டுகளி, பொறாட்டுநாடகம் எனப் பலபெயர்களில் அறியப்படுகிறது. இந்த வட்டாரக்கலை ஒரு நாடக வடிவம் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.
"பொறாட்டுகளி"யின் நோக்கம் முழுமையாக பொழுது போக்குக்காகவே நடத்தப்படுகிறது. பார்வையாளர்கள் ரசிக்கவும் சிரிக்கவும் மட்டுமல்லாமல் சமூகத்தின் ஒழுக்கக்கேடுகளைச் சுட்டிக்காட்டிச் சிந்திக்கவும் இக்கலைவடிவம் பயன்படுகிறது.
ஆட்டம் நடக்கும் காலம்
"பொறாட்டுகளி" மார்கழி, தை மாதங்களடங்கிய இளவேனிற் காலத்தில் பெரும்பாலும் நடத்தப்படுகின்றது. காரணம் இது அறுவடைமுடியும் காலம். இதை நடத்தும் பாணர்கள், செறுமர்கள், பறையர்கள் போன்ற இனத்தவர்கள் வேலைகள் முடிந்து ஓய்வு கொள்ளும் காலமும் இதுவேதான்.

நிகழிடம்

"பொறாட்டுகளி" கோவில் விழா நாட்களிலும், சிறப்புக்குசிய நாட்களிலும் (எ.கா புத்தாண்டு தினம்) நடத்தப்படுகிறது. பாலக்காடு மாவட்டத்தின் சிறிய ஊர்களில் கோவில் திருவிழாக்களுக்கு நிகராக இது விளங்குகிறது. கோவில்களுக்கு அருகிலுள்ள நெல் அறுத்த வயல்களே ஆட்டம் நடக்கும் அரங்கமாக மாறுகின்றன. இரவு நேரங்களில்தான் ஆட்டம் நடக்கும்.

வடிவம்

"பொறாட்டுகளி" யில் உரையாடல், பாட்டு இரண்டின் வழியாகவும் கதை சொல்லப்படுகிறது. சோத்யக்காரன் (கேள்வி கேட்பான்) ஒரு கேள்வி கேட்பான். அதற்கான விடையினைப் பாத்திரம் கதையாகப் பாடும். இப்படி கேள்வி பதில் என்ற வடிவத்திலேயே நாடகம் தொடரும்.

பாத்திரங்கள்

"பொறாட்டுகளி" யில் தாசி, வண்ணான், வண்ணாத்தி குறவன், குறத்தி, செறுமன், செறுமி, கவரா, கவரச்சி, சக்கிலியன், சக்கிலிச்சி, பூக்காரி, அவி ஆகியவை முக்கியமான வேடங்களாக நடிக்கப்படுகின்றன.
"பொறாட்டுகளி" முழுவதும் வரும் சோத்யக்காரன் முக்கியப்பங்கு பெறும் பாத்திரம். ஒன்றுக்கொன்று தொடர்பற்றதாய்த் தோன்றும் பகுதிகளை ஒன்றிணைத்துக் கதையில் ஒரு தொடர்பை ஏற்படுத்துவது சோத்யக்காரனின் வேலை. பார்வையாளன் நிலையில் வரும் சந்தேகங்களையும் சோத்யக்காரனே கேள்விகளாகக் கேட்டு காட்சியில் ஒன்றிப்போகச் செய்கிறான். நடிப்பவனுக்கும் பார்வையாளனுக்கும் பாலமாகச் சோத்யக்காரன் செயல்படுகிறான். இதில் ஆண்களே பெண் வேடம் ஏற்று நடிப்பார்கள்.

இசைக்கருவிகள்

"பொறாட்டுகளி"யின் கதைகளைப் பாடல்களாகப் பாடும் போது மிருதங்கம், செண்டை, ஜால்ரா, ஆர்மோனியம் போன்றவை பின்னணி இசைக் கருவிகளாக இருக்கும்.

மொழி

"பொறாட்டுகளி"யில் பயன்படுத்தப்படும் மொழிநடை சாதாரண மக்களின் பேச்சுமொழியாகயே இருக்கிறது. உயர்கலைகளுக்குரிய மேல்நிலையாக்கம் (*sanskritisation*) இதில் நடக்கவில்லை. ராவணன் சீதையை எடுத்துப் போனதை "மண்ணொடு கொண்டு போனான்" என்று கம்பன் கூறுவது போலவே "பூமி பிளர்ந்து கயிற்றி" என்று பாடுகிறார்கள்.

உள்ளடக்கம்

"பொறாட்டுகளி"க்கான பாடல்களில் உள்ளடக்கங்களாக இராமாயண, பாரத கிளைக் கதைகள், பாலக்காடு மாவட்ட நிகழ்ச்சிகள் போன்றவை அமைந்திருக்கின்றன. **1950**-க்குப்பின் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் இயக்க எழுச்சியோடு பொறாட்டுகளிக்கு இன்னொரு பரிமாணம் கிடைத்தது. அதுவரை இருந்த உள்ளடக்கங்கள் மாறி சமூகத்தின் உயர்நிலையிலுள்ளவர்கள் செய்யும் அக்கிரமங்களை அடையாளம் காட்டும் புரட்சிகரக் கருத்துக்கள் பாடல்களாயின.

பொறாட்டுகளி"க்கு கதைகளைப் பாடலாக்கித் தருவதில் பாணர் என்ற இனத்தினரின் பங்கு முக்கியமானது. இயல்பாகவே பாட்டுக்கட்டும் திறமையும் மொழியறிவும் பெற்றவர்களாக பாணர்களே இருந்தனர். பல இனங்களைச் சேர்ந்த குழுக்கள் "பொறாட்டுகளி" யை நடத்தினாலும் பாடல்கள் பாணர்களுடையதாகவே இருக்கும். முன்பு பாடல்கள் மட்டுமே பாடிய பாணர்கள் நடிக்கத் தொடங்கிய போது பிறருடன் சண்டை ஏற்பட்டது. இதைக் கேட்ட "இல்லுவமன தம்புரான்" "பாணனு ஏது வேஷம் கெட்டாம்" (எந்த வேடம் வேண்டுமானாலும் போடலாம்) என்று பட்டயம் எழுதிக் கொடுத்ததாக ஒரு செய்தி உண்டு. நகைச்சுவை "பொறாட்டுகளி"யில் நகைச்சுவை என்பது பாமரத்தன்மையுடையது. சோத்யக்காரன் அந்தந்தக் காலம், இடம், மக்கள்நிலை போன்றவற்றைக் கணக்கிலெடுத்து நகைச்சுவையாகக் கேள்வி கேட்பான். பாத்திரங்கள் தம்மிடையே வரும் உரையாடலில் பாலியல் கலந்த கொச்சையான நகைச்சுவையை வெளிப்படுத்துவார்கள், "கெட்டவார்த்தைகள்" என்று படித்த, உயர்வர்க்கம் தள்ளிவைக்கும் வார்த்தைகள் சாதாரணமாகப் பேச்சில் இடம்பெறும். இது இரவுமுழுவதும் பார்வையாளர்களைக் (பெரும்பாலும் ஆண்கள்) கட்டிப்போடும் கவர்ச்சி கொண்டதாக இருக்கும். உரையாடலில் மட்டுமே நகைச்சுவையைக் காணமுடியும். நாடகத்தில் வரும் கதைப்பகுதிகளில் நகைச்சுவைக்கான கூறுகளே இல்லை எனலாம். "பொறாட்டுகளி" யின் பிரிவுகள் பொறாட்டு என்பது "பொறாட்டுகளி" யிலிருந்து சிறிது மாறுபடும். இதில் சோத்யக்காரன் பாத்திரம் இருக்காது. இதில் வரும் பாத்திரம் மலைவேடன், முக்குவன், மாப்பிள்ளை, ஜோதிடன், தட்டான், பட்டாணி, யோகி போன்றவை. இந்தப் பொறாட்டு பாலக்காட்டைத் தாண்டி பையனூர், நீலேஸ்வரம் போன்ற இடங்களிலும் நடத்தப்படுகிறது. ஆடும்முறை "பொறாட்டுகளி" பல குழுக்களால் நடத்தப்படுகிறது. உறுப்பினர்களின் எண்ணிக்கை குழுவைப் பொறுத்து மாறுபடும். குறைந்தது **5** பேர்களாவது இருப்பார்கள். ஒரேவிதமான காலடிவைப்புகள் உண்டு. கதைபாடும் முறைக்கேற்பவும். பாத்திரத்தின் உணர்ச்சி வெளியீட்டிற்கேற்பவும் காலடிவைப்புகள் மாறும். நடித்தல் என்பது இதன் ஒரு பகுதி.

"பொறாட்டுகளி" நடக்கும் நாளின் மாலை நேரத்தில் நிகழ்ச்சி பற்றிய அறிவிப்புச் செய்யப்படும். இது 'கேளிகொட்டு" எனப்படும். முதலில் வண்ணாத்தி அரங்கத்திற்கு வந்து குரு, கணபதி, சரஸ்வதி, இஷ்ட தெய்வங்கள், இறுதியாக சபையோரையும் வணங்கும் ஒரு விருத்தத்தைப் பாடுவாள். கடவுள் வாழ்த்து குழுக்களிடையே மாறுபடும். அடுத்து சோத்யக்காரனின் கேள்வியோடு நிகழ்ச்சி தொடங்கும். மற்ற பாத்திரங்களின் அறிமுகம் நடக்கும். ஒரு கதையை ஒரேநாள் நடத்தாமல் பாகம் பாகமாகவே நடத்துவார்கள். "சீதயக் கொண்டு வருவான் போய காரணம் கேட்கணும் இந்நு" பொறாட்டுகளியில் தொன்மக்கூறுகள் தெளிவான சமூகஅமைப்பு இல்லாத மக்கள்குழு தனக்கென தொன்மங்களைக் கொண்டுள்ளன. தொன்மம் உருக்கொள்ளுதல் என்பது நாட்டுப்புறக்கதைகளில் தவிர்க்க முடியாத ஒரு கூறாகும். அறிவுபூர்வமான மனிதச் செயல்பாடுகளின் விளைவல்ல தொன்மங்கள். அவை மனிதனின் அடிமனதில்தான் தோற்றம் கொள்கின்றன" என்கின்றனர் பிராய்டு போன்ற உளவியலாளர்கள் (கோவிந்தன், கோவிந்தன்ட உபன்யாசங்கள், ப.*342*). இதையே, "மனிதன் சிந்திக்கத் தொடங்கு முன்னரே அவனுக்குள் ஏற்பட்ட மனவிகாரங்களே தொன்மங்கள்" என்கிறார் லிலிபுருஸ் (மேற்கோள், மேலது ப*342*) ஒவ்வொரு தொன்மத்திற்கும் அது உருவாகக் காரணமான அடிப்படை நிகழ்ச்சி என்பது மனித சமுதாய வரலாற்றில் வெகு தொலைவு பின்னோக்கிப் போகும் போது கண்டெடுக்க முடியும். அந்த மூலநிகழ்ச்சி பரம்பரையாகக் கைமாற்றப்படும் போது மூல நிகழ்ச்சிக்கு ஏற்படும் வளர்ச்சிதைமாற்றமானது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாகவும் வியப்பாகவும் இருக்கிறது. தினசரி வாழ்வில், தான் எதிர் கொள்கிற நிகழ்வுகள் குறித்து ஏதாவது ஒரு முடிவுக்கு வராமல் மனிதனால் வாழமுடியாது. அந்தக் குறிப்பிட்ட நிகழ்வு பற்றி அறிவின் துணை கொண்டு காரணகாரியங்களை உண்டாக்க முடியாத போது கற்பனையின் துணையோடு மனிதசெயலுக்கு மீறியதாக சம்பந்தப் படுத்துகிறார்கள். பிரபஞ்ச நடைமுறைகளை அறிவோடு சேர்த்து ஆராய்ந்தறிய முடியாத நிலையில் தொன்மங்கள் தோற்றம் கொள்கின்றன.

"பொறாட்டுகளி"யில் வண்ணார் இனம் பற்றிய ஒரு

கதை உண்டு. ஒரு வண்ணான் துணி துவைப்பதைப் பார்த்த ஆசாரிப் பெண்ணொருத்தி, அவனிடம், "கல்லைச் சாய்வாக வைத்து அடிச்சுத் துவைச்சு கஞ்சியும் நீலமும் போட்டுக் காயவைத்துக் கொட்டி கொண்டு அடிச்சுத் தேய்த்து மடி" என்று சொல்லித்தந்து போகிறான். அந்தமுறை சலவையைப் பார்த்த 'தம்புரான்' "இது யாருடைய சலவை" என்று விசாரிக்கும் போது பெண்ணைப் பற்றிச் சொல்கிறாள் வண்ணான். "அவளையே திருமணம் செய்" எனத் தம்புரான் உத்தரவு போடத் தட்டமுடியாத ஆசாரிமாரும் பெண் கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். கல்யாணதினம் கல்லிலே பந்தல் போட்டு வண்ணார் இனம் வந்து இருந்ததும் பாவையந்திரம் மூலம் பந்தலை போட்டு விழச்செய்து கொன்றுவிட்டார்கள். அதில் தீண்டாதவளாயிருந்த வண்ணாத்தியொருத்தி திருவரங்கன் என்ற பாணனோடு கூடி ஒரு ஆணும் பெண்ணும் பெற்றெடுத்து வண்ணார் இனத்தை விருத்தி செய்ததாகக் கதை சொல்கிறார்கள். (திருவரங்கன், தம்புரானை அதிகாலையில் பாட்டுப்பாடி எழுப்புபவன்) வண்ணார் இறந்த காரணம் தெரியாத போது கல்பந்தம் என்ற கற்பனை கலந்து காரணம் தேடிக்கொண்டனர். வேலைக்குப் போனவர்கள் தண்ணீரில் மூழ்கி இறந்த பாடலில் கூட வேலைக்குப் போகும் போது, "கந்தும் கரியும் சகனம் வந்நு" என்று சகுனம் பற்றிய நம்பிக்கையைப் பேசுகிறார்கள். கம்யூனிசத் தாக்கம் பாணன் தனக்குத் தெரிந்த புராணக்கதைகளைப் பாட்டுகளாக்கித் தன் மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பயன்பட்ட "பொறாட்டுகளி" கம்யூனிஸ்ட் இயக்கத்தாரின் கையில் வந்தபோது புரட்சிகரமாகச் செயல்பட்டது. சாதாரண மக்களிடம் விழிப்புணர்வைக் கொண்டுவர அவர்களின் தொடர்பு சாதனங்களாகிய கலைவடிவங்களிலேயே பிரச்சினைகளைப் பேசுவது என்ற செயல்பாட்டின் மூலமே கம்யூனிஸ்ட் இயக்கம் தன் எழுச்சியைச் சாதித்துக்கொள்ள முடிந்தது. "பொறாட்டுகளி" ஒரு சிறந்த பிரச்சார வடிவமாகக் கட்சியின் தேவையை நிறைவேற்றி வைத்தது. அதுவரை எப்படிச் சுரண்டப்படுகிறோம் என்றே தெரியாமலிருந்தவர்கள் தங்கள் உரிமைகளை, "நாழியரிபோலும் தந்நில்ல முதலாளி நாலணா காசுபோலும் தந்திட்டில்ல ஒந்நாலு தொழிலாளிகள் முதலாளிக்கிந்நல்லே ஒர்ம வந்து" என முதலாளிவர்க்கத்தின் மோசமான அடுத்த பக்கத்தைப் பொறாட்டுகளியில் பேசினர். நீலி என்ற பெண்ணைக் கூடிய தம்புரான், அவள் தாயான போது தலைமறைவாகிறார். நீலியைச் சாதியிலிருந்து தள்ளி வைக்கிறார்கள். அவள் குளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொள்கிறாள். தங்களைச் சார்ந்த பெண்ணின் இந்த நிலையை, "கேக்குவின் கூட்டரே நாட்டிலே ஜன்மிமார் செய்யந்ந அக்ரமங்கள்" என எல்லோரிடமும் எடுத்துப் போகிறார்கள். "பொறாட்டுகளி" யில் தலித்கூறுகள் "பொறாட்டுகளி"யில் தலித் பண்பாட்டின் கூறுகள் விரிவாக ஆராயுமளவு உள்ளன. இப்பொழுதுள்ள பொறாட்டுகளியைப் பார்க்கும் போது அதில் தலித்துகளின் எதிர்ப்பண்பாடு என்ற நிலையின் கூறுகளைக் காணமுடியும். இதற்குக்காரணம் கம்யூனிச இயக்கம் தந்த அறிவே ஆகும். அறிவைத் தாண்டிய (*irrational*) உந்துதலின்படி வாழ்வது எப்போதுமே வித்தியாசங்களைத் தாண்டி ஒருங்கிணைவை நோக்கிச் செல்லுவது, விலக்குகளை மீறுவது, இன்பக்கொள்கைப்படி களிப்பாக வாழ்வது, மிதமிஞ்சிய நுகர்வு (*Excess*) கூட்டு வாழ்வைப் போற்றுவது" என்று எதிர்நிலைப் பண்பாட்டைப் பற்றி ரிச்சர்டு லன்னாய் (*Richard Lannoy*) கூறியிருக்கிறார் (ராஜ்கௌதமன். தலித் பண்பாடு, ப.29) "பொறாட்டுகளி"யில் வரும் வண்ணாத்தி நான்கு பேரை மணந்த கதை வருகிறது. இன்பக்கொள்கை என்பதே அவர்களின் கொச்சையான நகைச்சுவையாக வெளிப்படுகிறது. தலித்துகளின் எழுச்சிக்காகச் செய்ய வேண்டியன பற்றி ராஜ்கௌதமன் பின்வருமாறு கூறுகிறார். "தலித் மக்களிடம் தன்னம்பிக்கைகளை வளர்க்கும் முகமாக மேற்சாதியார்களின் அசிங்கங்களை, கீழ்மைகளை அம்பலப் படுத்தவேண்டும்; அதோடு தலித் இளம் தலைமுறையினரின் ஆற்றலை வளர்ச்சியை எடுத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டும் (தலித் பண்பாடு, ப.30). இதைப் பொறாட்டங்களி நல்ல முறையில் சாதித்துள்ளது.

கூலிகொடுக்காத முதலாளியை,
"தாப்பினை தல்லிப் பொளிக்கும் ஞங்கள்"
என மிரட்டுமளவு கொண்டு சேர்த்திருக்கிறது.
"வெட்டிப்பணி செய்யனமெந்நு முதலாளி பறஞ்சு
வெறும்பணி செய்யுலாந்நு தொழிலாளி உறச்சு"
என்று வரும் வரிகளில் எதிர்கலகப் பண்பாட்டினை அடையாளம் காண முடிகிறது.

## வட்டார நிகழ்ச்சிகள்

பாலக்காட்டில் தேர்தல் வந்தது. மலம்புழா அருகில் ரப்பர் தோட்டத்திற்கு வேலைக்குப் போன ஆண்களும் பெண்களும் நீரில் மூழ்கி இறந்தது போன்ற நிகழ்ச்சிகளும் பொறாட்டுகளியின் உள்ளடக்கங்களாயிருக்கின்றன. எனவே பொறாட்டுகளி ஒரு வரலாற்றுப் பதிவான ஆவணமாகவும் செயல்படுகிறது.

## முடிவுரை

பொறாட்டுகளி தாழ்த்தப்பட்ட மக்களின் கலையாகவே இருந்து வருகிறது. நாட்டுப்புறக்கலைகள் குறித்த ஆய்வு என்பது ஒரு சமுதாயத்தின் கலை வெளிப்பாடுகளை ஆய்ந்தறிகிற சிந்தனை. ஆதலால் இன்றைக்கு நிகழில் இருக்கிற கலைவடிவங்களோடு செய்யும் அணுகுமுறை கூட அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாடு மற்றும் கலாச்சாரம் குறித்துள்ள வேர்களைத் தொட்டறிகிற முயற்சியாகவே உள்ளது. பொறாட்டங்களியை இன்னும் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தும் போது தலித் பண்பாட்டின் வேர்களைக் கண்டறிய முடியும்.

**ஆய்வுக் கட்டுரை**

முனைவர் க. ஜெயபாலன்

# தமிழ்த் திரையுலகின் புதிய போக்குகள்

மெட்ராஸ் திரைப்படத்திலும் கருடன் திரைப்படத்திலும் அதிகாரம் மிக்கவர்களின் பேராசைகளால் எவ்வாறு சராசரி மனிதர்கள் வீழ்த்தப்படுகின்றனர் உட்பகைகளை உருவாக்கி அவர்கள் எவ்வாறு காலி செய்யப்படுகின்றனர் என்பதை மிக நன்கு வெளிக்காட்டி உள்ளனர் இயக்குநர்கள்.

விளையாட்டில் உள்ள மாபெரும் அரசியலை வெண்ணிலா கபடிக் குழு தொடங்கி குத்துச்சண்டை வீரராக ஜெயம் ரவி நடித்த பூலோகம் திரைப்படம், தனுஷ் அடிமுறை வீரராக நடித்த பட்டாஸ் திரைப்படம், ப்ளூ ஸ்டார் வரையில் விளையாட்டுக்குள் இருக்கும் சர்வதேச அரசியலைப் பலரும் விரிவாக தமிழ்த் திரை உலகில் பேசி வருகின்றனர்.

மாபெரும் முதலாளித்துவ நிலவுடமை ஒடுக்கு முறையின் கீழ் ரஷ்ய எழுத்தாளர்கள் வாழ்ந்த பொழுது அதாவது புதிய ரஷ்யா உருவாவதற்கு முன்னர் இருந்த எழுத்தாளர்கள் டால்ஸ்டாய் தொடங்கி மக்சீம் கார்க்கி, இவான் துர்க்கேனிவ், அலெக்சி தல்ஸ்தோய், மாபெரும் சிறுகதை மன்னர் ஆண்டன் செகாவ் வரையில் அனைவரும் நேரடியாக அரசியல் செயல்பாடுகளுக்கு விளக்கம் அளிக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் படைப்புகள் வழியே காலம் கடந்து அதிகாரத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் உன்னதப் படைப்புகளை உருவாக்கினார்கள்.

இவ்வாறு தான் எந்தமொழியிலும் தோன்றியுள்ள உன்னதமான படைப்பாளர்களும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் திரைப்பட இயக்குநர்களும் தாங்கள் வாழும் சமூகத்தின் மீது ஆழமான விமர்சனங்களை வைக்கின்றார்கள். நேரடியாக ஒரு மனிதர் மட்டுமே குற்றவாளி அல்ல இந்த சமூக கட்டமைப்பு குற்றமாக இருப்பதால்தான் மாபெரும் அநீதிகள் நிகழ்கின்றன என்பதை தங்கள் படைப்புகள் வழியாக அவர்கள் எழுதிக் காட்டுகின்றனர். அதனால்தான் படைப்புகள் காலம் கடந்தும் நிற்கின்றன.

அக வாழ்க்கையில் “சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்” என்பது சங்க இலக்கியம் காட்டுகின்ற தமிழ் மரபின் உயர்ந்த ஒரு கூறாகும். அதே வகையில் தான் புற வாழ்க்கையில் கூட அநீதியாளர்கள் ஒருவராக மட்டுமல்ல சுரண்டுபவர்கள், ஒடுக்குபவர்கள் ஒருவராக இல்லை பலரும் இங்கு இருக்கிறார்கள். நமக்கும் அதில் பங்கு இருக்கிறது என்று அனைவரையும் கேள்விக்கு உட்படுத்துவதே படைப்பின் மகத்தான வேலை.

கர்ணன், மாமன்னன், அசுரன் உள்ளிட்ட திரைப்படங்கள் நுட்பமான அரசியலைப் பேசுகின்றன. எவ்வாறு மிக நுட்பமாக அதிகார மையங்கள் அதிகாரம் அற்றவர்களைத் தொடர்ந்து வெளியே நிறுத்துகின்றன அதற்கான வேலைகளை எவ்வாறு தொடர்ந்து செய்து வருகின்றன என்பதை இயக்குனர்கள் சொல்ல முயலுகின்றனர்.

நிர்வாகத்தில் இருப்பவர்கள்தான் அரசை இயக்குகிறார்கள் அல்லது வேறு விதமாகச் சொன்னால் அதிகார வர்க்கத்தின் அல்லது ஆட்சி வர்க்கத்தின் செயல்பாடுகளை நடைமுறையில் மாற்றி வைப்பவர்கள் நிர்வாகிகள்தான். இந்த நிர்வாகிகள் ஆட்சி அதிகாரத்திற்கு எவ்வளவு சாதகமாகவும் மக்களுக்கு விரோதமாகவும் இருக்கிறார்கள் என்பதை நீண்ட நெடுங்காலமாக பல திரைப்படங்கள் தமிழ்த்திரையுலகில் காட்டியுள்ளன. ஜெய் பீம் போன்ற திரைப்படங்கள் இன்னும் ஆர்டிகல்14, எம் எல் ஏ வீட்டில் பலாப்பழம் திருடு போன கதை உள்ளிட்ட பல ஹிந்தி திரைப்படங்கள் யாவும் புதிய அணுகுமுறைகளில் நிர்வாகத் துறை எவ்வாறு செயல்படுகிறது என்று காட்டின.

அதிகாரத்தில் இருப்பவர்கள் எவ்வளவு அச்சப்படுகின்றனர் தங்கள் நிலை தாழ்ந்து விடும் என்று அது அதற்காக எவ்வளவு கொடிய வன்முறைகளை கட்டவிழ்த்து விடுகின்றனர் என்பதை நன்கு இத்திரைப்படங்களில் வெளிப்படுத்துகின்றனர். அதேநேரம் ஜனநாயக சக்திகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதுணையாக இருக்க எவ்வாறு முயலுகின்றன என்பதையும் இத்திரைப்படங்கள் நன்கு காட்டின.

அந்த வகையில் அண்மையில் வெளிவந்த பல்வேறு திரைப்படங்கள் மாபெரும் சாதிய ஒடுக்கு முறையின் வடிவங்களை நுட்பமாக வெளிக்கொணர தமிழ் திரைப்பட இயக்குனர்கள் தயாராகி உள்ளனர். பண்டித அயோத்திதாசர், தந்தை பெரியார், மகாகவி பாரதியார் அகில இந்திய அளவில் சாதிய கட்டுமானம் குறித்து உன்னதமான ஆய்வுகளை செய்து உலக அளவில் பேரறிஞராக நிற்கின்ற டாக்டர் அம்பேத்கர் உள்ளிட்ட மகத்தான சிந்தனையாளர்களின் சிறப்பான கூறுகளை உள்வாங்கிக் கொண்ட வெற்றி என்று கூறுகின்ற வகையில் பல திரைப்படங்கள் சாதிய கட்டுமானம் குறித்து கேள்விகளை எழுப்ப தொடங்கி இருப்பது நல்ல ஒரு போக்காகும்.

“தனக்கு லாபம் வரும் போது எனில் தனக்குத்தானே கூட சவக்குழி வெட்டக்கூடத் தயாராக இருக்கும் முதலாளித்துவம்” என்பது பேரறிஞர் காரல் மார்க்ஸ் அவர்களின் கருத்தாகும். அவ்வகையில் இந்த கலை படைப்புகள் வியாபாரம் ஆகிறது என்று உற்பத்தி ஆகிறதா என்ற ஒரு கருத்தும் கூட ஒரு பக்கத்தில் இருந்தாலும் உண்மையில் மக்கள் மத்தியில் பேசப்படாத கருத்துக்களைத் தைரியமாகப் பேச வருவது பாராட்டிற்குரியது. ஊழலை எதிர்த்து நூற்றுக்கணக்கான திரைப்படங்கள் இந்திய அளவில் உருவாகி இருக்கின்றன ஆனால் சாதிய கட்டுமானம் எதிர்த்து அது ஒரு தர்மம் என்று பேணப்பட்டு வருகின்ற இந்திய சமூக சூழலில் அதை எதிர்த்து எத்தகைய படைப்புகள் உருவாகி இருக்கின்றன என்றால் மிக குறைவாகவே உள்ளன எனலாம்.

அவ்வகையில் தமிழ்த் திரை உலகில் பல புதிய அலை போக்குகளை அண்மைக்காலமாக பல இயக்குநர்கள் உருவாக்கி வருகின்றனர். அவர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள். இத்தகு அரசியல் சூழலில் உருவாவதற்கு தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாக சமூக நீதியை முன்மொழிந்து அநீதிகளை அரசியல் களத்தில் எதிர்த்து போராடிக் களம் கண்டு வருகின்ற அத்தனை தலைவர்களும் அறிஞர் பெருமக்களும் பாராட்டுக்குரியவர்கள் என்பதை இங்கு முன்மொழிய வேண்டும்.

**ஆய்வுக் கட்டுரை**

முனைவர் அ. விஜயன்

# ஆள் பாதி ஆடை பாதி

ஆள் பாதி ஆடை பாதி' டி கே சங்கரநாராயணன் என்னும் மலையாள எழுத்தாளரால் எழுதப்பட்ட ஒரு மலையாளச் சிறுகதை. மாதிரிபூமி இதழின் ஓணச் சிறப்பு இதழில் வெளிவந்துள்ளது. பாலக்காட்டு ஐயர்களின் பின்புலத்தில், ஐயர் குடும்பத்தின் சூழலை வைத்து எழுதப் பெற்றது. இக் கதையின் தலைப்பு தமிழில் இருப்பது அழகு. அழகிய ஆடை அணிந்து கல்லூரிக்குச் சென்ற இளம்பெண் பெண் முகம் தெரியாத யாரோ ஒருவரால் கொலை செய்யப்பட்டு விடுகிறார். எப்படி கொலை செய்யப் பட்டார் என்பது குறித்து இந்த கதை பேசவில்லை. ஏன் கொலை செய்யப் பட்டாள் என்பது குறித்துப் பேசுகிறது.

டி கே சங்கரநாராயணன் பாலக்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர். 1963-ல் பிறந்தவர். பாலக்காடு அரசு விக்டோரியா கல்லூரி ஆங்கில மொழி இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றவர். பிறகு தஞ்சாவூரில் ஜோதிடக் கலையில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஆயினும் 26 ஆண்டு கள் மருத்துவத்துறையில் மருந்து வியாபாரியாக பணியாற்றிவர். பல நூல்களை வெளியிட்டுள்ளார், புதினங்களையும் எழுதியுள்ளார், இவரு டைய 'சவுண்டு' என்ற புதினம் பல தென்னிந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது.

மாதங்கி எனும் பெண் இங்கே முதன்மைக் கதாபாத்திரமாக இருக் கிறார். கல்லூரியில் படிக்கும் அவள் அத்தனை அழகானவள் அல்ல. உயரம் குறைவு; கறுப்பு நிறம்; களை இல்லை "நான் மட்டும் ஏன் இப்படி பிறந்தேனோ" என்று அவள் வருந்துகிறாள். தன்னைக் குறித்த தாழ்வு மனப்பான்மை அவளுக்கு உண்டு. ஒரு நாள் பாட்டியின் மடியில் தலை வைத்து அவள் வருந்தி அழும்போது பாட்டி, "இதோ இப்ப வரேன்" என்று சொல்லி ஒரு பழைய மர அலமாரியில் இருந்து ஒரு அழகிய காஞ்சிபுரம் பட்டுப் புடவையை எடுத்து வருகிறாள்; மாதங்கியை அணியச் செய்கிறாள். மாதங்கி இப்போது கண்ணாடி முன்னே நின்று பார்க்கிறாள். தனது உருவம் அழகாகவும் பிறரைக் கவரும் விதத்திலும் இருப்பதாக உணர்கிறாள். பிறகு நவீன ஆடைகள் வாங்க தகப்பனாரை நச்சரிப்பது; அடிக்கடி அழகு நிலையம் சென்று வருவது; தனது அழகு குறித்த பிரக்ஞையில் இருப்பது என மாதங்கியின் அன்றாட வழக்கம் புதுத் திசையில் பயணிக்கிறது.

பல வழிகள் தன்னை அழகுபடுத்திக் கொள்வது, பல்வேறு வகையான நவீன ஆடைகளை வாங்குவது குறித்து தனது தந்தையாகிய இராமையர் சலித்துக் கொள்கிறார். இதற்கெல்லாம் பாட்டியாகிய சின்னம்மா தான் காரணம் என்று

கொள்கிறார். "ஒரு மகள் தானேடா" என்று பாட்டி சின்னம்மா பதிலுரைக்கிறாள்.
இப்பொழுது மாதங்கி அழகியாகிவிட்டாள். அவள் இருக்கும் தெருவில் இருசக்கர வாகனங்கள் உறுமிக்கொண்டு கொண்டு பறக்கின்றன. அவள் போகும் இடமெல்லாம் வாலிபர்கள் பின் தொடர்கிறார்கள். கல்லூரிக்குச் சென்றாலும் சிறப்பு வகுப்புக்குச் சென்றாலும் இது தொடர்கிறது. வீட்டுத் திண்ணையில் இருக்கும் பொழுது பல வாகனங்களின் உறுமல் தொடர்கிறது. "நீ உள்ளை போ' என்று மிரட்டுகிறார் அப்பா இராமையா. இப்படி இருந்த நாட்களில் ஒரு நாள் மாதங்கி கல்லூரிக்குச் சென்று வரும் வழியில், மாலை நேரச் சிறப்பு வகுப்புக்கு சென்றுவிட்டு ஆறு மணிக்கு வீடு வந்து விடுவாள். அப்பொழுது அங்கே இருக்கும் கோயின் மணியின் ஓசை கேட்கும். அவ்வேளை வீட்டில் தீபம் ஏற்றுவது மாதங்கிதான். ஆனால் நேற்று நெடுநேரம் ஆனப்பின்னும் கூட மாதங்கியைக் காணவில்லை. இரவு 11 மணி ஆகியும் அவள் வீடு வந்து சேரவில்லை. சிறப்பு வகுப்புக்கும் செல்லவில்லை என்பதை ஆசிரியரோ உறுதிப்படுத்திச் சொல்லி விடுகிறார். தேடிப் பார்க்கிறார்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள். போலீசுக்கு சொல்லி விடலாம் என்று நினைக்கிறார்கள். ஒரு நாள் பொறுத்து இருக்கலாம் என்று ஒருவர் பதில் சொல்லுகிறார். செய்தி ஊடகங்களில் வந்து விடக்கூடாது என்பது வீட்டாரது ஆதங்கம். "சமூக ஊடங்களில் காலமல்லவா" என்பது பலரது கவலை. யாருடனாவது................(ஓடிப்போயிருக்கலாம்) என்ற சந்தேகமும் எழுகிறது. ஆனால் வசீகரமற்ற, முக அழகற்ற , கறுத்த பெண்ணை யார் காதலிப்பார்கள் என்ற கவலையும் பலர் மனத்தில் எழுகிறது. அடுத்த நிமிடங்களில் ஒரு முழுக்க தெரிந்துவிட்டது. காலையில் விக்டோரியா கல்லூரியின் அருகில் இருக்கும் ஜெயினமேடு என்ற இடத்தில் உள்ள அழுக்கு ஓடையில் நாய்களால் குதறப்பட்ட ஒரு பெண்ணின் உடல் கிடப்பதாக செய்தி சொல்லப்படுகிறது. அவ்வுடலில் கீழ் தாடையில் இருக்கும் மச்சம் அது மாதங்கி தான் என்பதை உறுதிப்படுத்த உறவினர்களுக்கு உதவுகிறது. இதை யார் செய்திருக்கக் கூடும் என்று காவல்துறையினர் வினா தொடுக்கின்றனர். யாரும் பதில் சொல்லவில்லை ஒருவன் மட்டும் அங்கிருந்து மெல்ல நகர்கிறான். அவனை காவல் துறை அலுவலர்கள் விசாரித்த பொழுது குழந்தை பருவம் முதல் இருவரும் ஒன்றாக நடந்தவர்கள்; விளையாடியவர்கள் என்பதும் அதனால் மாதங்கியின் இழப்பைத் தாங்கிக் கொள்ளாதவன் என்பதும் தெரியவருகிறது. அவன் அழுகையை மட்டுமே பதிலாகத் தருகிறான். எல்லாவற்றிற்கும் காரணம் பாட்டி சின்னம்மாதான் என்று இராமையர் மீண்டும் பழியை சின்னம்மாவின் மீது திருப்புகிறார். அந்தப் பழியை ஏற்றுக் கொள்ளாத முடியாத பாட்டி தக்க பதிலை தன் மகனுக்கு உரைக்கிறார்.
"பெயிண்ட் தான் வீட்டுக்க்கு ஆடை, பாட்டுக்காரனுக்கு சந்தம் ஆடை அரசியல்வாதிக்கு அதிகாரம் ஆடை, சமையலுக்கு கை பக்குவம்தான் ஆடை அது மாதிரிதான் பெண்களுக்கும்"
சின்னம்மா பாட்டி சொல்லி முடித்தவுடன் ஏதோ ஆலோசனையில் இராமையரின் மனத்தில் மாதங்கியின் பழைய உருவமும் புதிய உருவமும் மாறி மாறி வந்து சென்றன.

ஒரு தமிழ் பிராமணரின் குடும்பச் சூழலை மையமாக வைத்து எழுதப்பட்ட இந்த கதையின் தலைப்பே தமிழிலேயே அமைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. ஆள் பாதி ஆடை பாதி. மூன்று வாரங்களுக்கு முன்பு சுற்றுலா சென்ற இடத்தில் நன்றாக – சிறப்பாக – ஆடை அணிந்திருந்ததன் காரணமாக ஒரு மாணவன் ஒரு கும்பலால் கடத்தப்பட்டான். கடத்தல் காரர்கள் 15 லட்ச ரூபாய் கேட்டு பெற்றோரை மிரட்டினார்கள். காவல் துறையின் உதவியுடன் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த அந்தப் பையன் மீட்கப்பட்டார். இப்படி ஆண்களே ஆடையைக் கண்டு கடத்தப்பட்டால் இளம்பெண்களின் நிலையை என்னென்பது. வாலிபப்பெண்கள் பாலியல் துன்பங்களுக்கு ஆளாகுதல் போன்ற குற்றச்செய்திகள் நம் நாட்டில் தொடர்ந்து நாள்தோறும் வந்த வண்ணம் இருக்கின்றன. குறிப்பாக பெண்கள் மீதும் சிறுமிகள் மீதும் ஏவப்படும் பாலியல் வன்கொடுமைகள் பாலியல் சீண்டல்கள் எல்லாம் நமது பண்பாட்டை நாற்றம் அடிக்கச் செய்கின்றன யாரும் திரும்பிப் பார்க்காத, பார்க்க விரும்பாத, முக வசீகரம் இல்லாத கறுப்பான ஒரு பெண் என்று பெற்ற தந்தையே கடிந்து கொள்ளும் ஒரு யுவதி ஆடைகளை மாற்றி அலங்காரத்தை மாற்றிப்பின் தானே அழகாக விடுவதாக உணர்கிறாள். இங்கே 16 வயதினிலே ஸ்ரீதேவி புத்தாடை அணிந்து கண்ணாடிமுன் நின்று தன்னைத்தானே ரசித்துக்கொண்டதை போல மாதங்கி ரசித்துக் கொண்டதாக எழுதுகிறார் கதையாசிரியர். தமிழ் குடும்பம் என்பதால் தமிழ் தொடர்பான செய்திகளை அவர் இணைத்துக் கொள்கிறார். புதுமை புகுத்தும் உத்தியாக ஆசிரியர் இதைச் செய்திருக்கலாம். எழுத்தாளர் எம்.டி. வாசுதேவன் நாயர் முதல் சிலர் இவ்வுத்தியைப் பின்பற்றியிருக்கிறார்கள். இங்கே அழகு ஒருபுறம் இருக்க ஆடை இன்னொரு புறம் பெண்களை வசீகரமானவர்களாக மாற்றுகிறது. வாலிபர்கள், பள்ளி பருவத்தில் எல்லா இந்தியர்களும் எனது சகோதர சகோதரிகள்

என்று உறுதிமொழி எடுப்பதோடு நிறுத்தி விடுகிறார்கள். அதைத் தொடர்ந்து பின்பற்ற முடிவதில்லை. எனவே பாலியல் சமத்துவம் குறித்து நம்முடைய குழந்தைகளுக்கு நாம் கற்றுத் தர தவறிவிட்டோம் அல்லது அந்த பண்பாடு சற்று புறந்தள்ளப் பட்டு விட்டது. ஒருபுறம் எளிதாக கிடைக்கக்கூடிய போதை பொருட்கள்; இன்னொரு புறமும் எல்லாவற்றையும் பெரிதாக காணக்கூடிய திறன் பேசிகள். திறந்து பேசி யுகத்தில் பிறந்து வளர்ந்த தலைமுறையினர் சுய சிந்தனை இல்லாதவர்கள்; பிறரைக் கண்டு செயலாற்றுபவர்கள்; பிறரைப் பார்த்து காப்பி அடிக்கும் பழக்கம் உடையவர்கள் அதை வழக்கமாக்க் கொண்டவர்கள்; சொந்தச் சமூகம், சொந்த பண்பாடு, உறவினர், நாட்டார் குறித்துத் தெரிந்து கொள்ளாதவர்கள். சமூகத்தில் இப்படிப்பட்ட செயல்கள் தலைவலியை ஏற்படுத்துகிறது; அதை மேலும் மிகுவிக்கிறது.

இந்த செயலைச் செய்தது யார்? யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்ற வினாவும் விடையும் கடையில் சொல்லப்படுகிறது. ஒரு வேலை போதைக்கு அடிமையான ஒரு வாலிபன் செய்திருக்கலாம் அல்லது ஒரு வடநாட்டு தொழிலாளி செய்திருக்கலாம். ஒரு கும்பல் கூட அந்த செயலை செய்திருக்கலாம். எனவே பெண்களின் பாதுகாப்பு நம் நாட்டில் கேள்விக்குறியாகிவிட்டது. இந்தத் தருணத்தில் நம் குழந்தைகளை இழந்து விட்டு, அல்லது இப்படி அகாலமாகப் பலி கொடுத்துவிட்டு இப்படி ஒரு பெரும் கொண்டாட்டம் கொண்டாட வேண்டியதன் அவசியம் என்ன என்ற வினா ஆசிரியர் கதையில் தொனிப்பதை நாம் காணலாம்.

கேரளாவின் சினிமா துறையில் எழுப்பட்ட பாலியல் துன்புறுத்தல் குறித்து விசாரித்த ஹேமா கமிட்டியின் அறிக்கை வெளிவந்த பிறகு நாள்தோறும் ஊடகங்களில் வரும் செய்திகள் சினிமாத்துறையில் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை எடுத்துரைக்கின்றன. இது கேரள சினிமாத்துரைக்கு மட்டுமல்லாது பொதுவாக இந்திய சினிமாத் துறையின் நிலைமைக்கு ஒரு சான்று எனில் அது மிகையன்று. பெண்ணின் பெருமை பேசும் நம் நாட்டில் தான் இத்தகைய தீமைகள் நடந்தேறுகின்றன. அதைத்தொடர்ந்து தெற்கு முதல் வடக்கு வரை எல்லா மொழிகளில் உள்ள திரை துறை நடிகைகள் தங்களுக்கு இழைக்கப்பட்ட பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து வெளிப்படையாக பேச துணிந்து விட்டார்கள். இது வரவேற்க வேண்டிய நல்ல தொடக்கம். புரட்சி. 75 ஆண்டுகள் கடந்தப் பின்னும் சுதந்திர நாட்டில் பெண்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது நம் நாட்டின் பெரிய வெட்கக்கேடாக இருக்கிறது என்பதை மறைமுகமாக எடுத்துரைக்கும் கதைதான் இந்த ஆள் பாதி ஆடை பாதி .

இனிமேலேனும் மாதங்கி போல நிர்பயா போல யாரும் இறந்து விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் ஆசிரியரின் இந்த கதையின் வழியே வலிமையாக முன் வைக்கப்படுகிறது. எளிமையான கதை தான், அறிந்த செய்தி தான், தெரிந்த இடம் தான், இதில் என்ன புதிதாக சொல்ல வேண்டியது இருக்கிறது என்று நாம் நினைக்கலாம் ஆனால் அந்தச் செய்தியில் இருந்து நாம் என்ன சிந்திக்க வேண்டும்; அதை தெரிந்து கொண்டு எப்படி செயலாற்ற வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாகவே இந்தக் கதையை நாம் பார்க்க வேண்டும்.

கதையில் சில இடங்களில் தமிழ் பேச்சு மலையாளத்தில் தவறாகவும் எழுதப்பட்டிருக்கிறது மாதும் நீ உள்ளே போ என்பதற்கு பதிலாக உள்ளை போ (பாட்ஷா பட வசனம்) என்று எழுதப்பட்டிருக்கிறது அது ஆசிரியரின் புரிதலா, புரிதல் தவறா என்ற எண்ணத்தை மலையாள வாசகருக்கு, குறிப்பாக பாலக்காட்டு வாசகருக்கு ஏற்படுத்துவதாக இருக்கலாம். பாலக்காட்டுத் தமிழுக்கென்று ஒரு அழகு இருக்கிறது அதைப்போல பாலக்காட்டு மலையாளத்திற்கும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. கதாசிரியர் தமிழழகை கொண்டு வருவதற்கு முயற்சி செய்கிறார். இந்த ஆசிரியர் மட்டுமல்ல பல எழுத்தாளர்கள் இந்நாட்களில் தமிழ்ப் பதங்களைப் பயன்படுத்துகிறார்கள்; தமிழ் பண்பாடுகளைப் பயன்படுத்துகிறார்கள் தமிழ் சொற்றொடர்களை பயன்படுத்துகிறார்கள். மலையாளம் தமிழின் சகோதரி மொழி என்பர். தமிழில் இருந்துதான் தென்னிந்திய மொழிகள் தோன்றின என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. எனவே சங்க இலக்கியம் என்பது தமிழர்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல அது திராவிடர்களுக்குச் சொந்தம் எனவே தங்களுக்கும் சொந்தமானது என்று கொண்டாடிக் கொண்டிருக்கிற இருக்கிறார்கள் நம் அண்டை மாநிலத்தவர்கள் – குறிப்பாக் மலையாள அன்பர்கள். நாமே அவர்களைப் பார்த்து , அவர்கள் வடமொழியில் இருந்து கடன் வாங்கிப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சில பதங்களை எடுத்து எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் மலையாள தினசரிகளிலும் இதழ்களிலும் தமிழ்ச் சொற்களை அவர்கள் வரிந்துகட்டிக் கொண்டு பயன்படுத்துவதை நாம் காணலாம் அதை ஒரு கொள்கையாகவும் கொண்டுள்ளர் எனில் அது மிகையன்று.

**நாட்டார் கதைத்தொடர்**

முனைவர் ப. குணசுந்தரி

காடரினக் கதை - கதை - 6

# அயகிய நல்லச்சி (அழகிய நல்லச்சி)

ஒரு ஊரில் ஒரு அப்பா, அம்மா அவர்களுக்கு இரண்டு பசங்களும் ஒரு பெண்ணும் இருந்தாங்க. அந்தப் பொண்ணு மிகவும் அழகானவள் அதனால அவள அவங்க அப்பாவும் அம்மாவும் ஒரு ஓலாம்போயையில் அமர்த்தியிருந்தனர்.




அந்த அப்பா அம்மா நாள்தோறும் விறகு வெட்டிச் சென்று கடையில் கொடுத்து ஒரு கராண்டுகம் (அளவில் சிறியது) அரிசி வாங்கி வந்து தம் குழந்தைகளுக்குச் சமைத்துத் தருவர்.அவ்வூரில் ஒரு பெரிய பாம்பும் இருந்தது. அந்தப் பாம்பு நாள்தோறும் வேட்டைக்குச் செல்லும் வழியில் அந்த அழகிய பெண்ணின் தம்பிகள் நகரப்பழத்தின் இலையையும் அத்திப்பழத்தின் இலையையும் கொண்டு போய் குவித்து வைத்து விளையாடுவர்.

அப்போது அச்சிறுவர்கள் தங்களுடைய அக்காவின் மேனியும் இப்படித்தானே சிவந்த நிறத்தில் இருக்கும் எனக் கூறிக் கொண்டே அந்த இலைகளைக் கொண்டு வந்து குவித்து வைப்பர். ஒரு நாள் இதைக் கேட்ட அந்தப் பாம்பு அந்த அழகிய பெண்ணைப் பார்க்க வேண்டுமென நினைத்தது.

ஒருநாள் அந்தப் பாம்பு அந்தப் பெண்ணின் வீட்டின் அருகே இருந்த மரத்தின்மேல் ஏறி படுத்துக் கொண்டது. அந்தப் பெண் வெளியில் வந்தால் பார்க்கவேண்டுமெனக் காத்துக் கொண்டிருந்தது. அவள் வெளியில் வருவதாகத் தெரியவில்லை. அந்தச் சமயம் உள்ளே ஓலாம்போயையில் அமர்ந்திருந்த அழகிய நல்லச்சிக்கு வேர்க்கத் தொடங்கியது. சிறிது நேரம் சென்றவுடன் அவள் தன் தாயிடம் தன்னை வெளியே விடுமாறு கூறுகிறாள். அவள் தாயும் மகளின் நிலை புரிந்து அழகிய நல்லச்சியை ஓலாம்போயையைத் திறந்து வெளியே விடுகிறாள். அவள் வெளியே வந்ததும் விண்ணும் மண்ணும் நீரும் மரமும் சிவந்து போயின. அவளுடைய அழகைக் கண்டு பறவைகள் பறக்க மறந்து நின்றன.

அவள் அழகைக் கண்ட பாம்பு அழகிய நல்லச்சியைத் தன் மனைவியாக மாற்ற வேண்டுமென்று நினைத்தது. பிறகு அன்றே அந்தப் பாம்பு தன்னுடைய கோட்டைக்குச் சென்றுவிட்டது. அந்தப் பாம்பு மந்திரச் சக்திகளை உடையதாகவும் இருந்தது. அழகிய நல்லச்சியைத் தன் கோட்டைக்குள் எப்படியாவது கடத்திக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று திட்டம் தீட்டியது.

தன்னுடைய மந்திரச் சக்தியைப் பயன்படுத்தி அழகிய நல்லச்சியின் தாய்க்குக் கடுமையான காய்ச்சலைக் கொடுத்தது. ஆனாலும் அவளின் தாய் தன் கணவனுடன் விறகு எடுக்கச் சென்றாள். விறகு விற்கச் சென்றபோது கடைக்காரன் இனி அவர்களிடம் விறகு கொண்டு வருவதை நிறுத்திவிட்டு மாங்காய்களைக் கொண்டு வந்து கொடுங்கள் என்றான்.

மறுநாள் மாங்காய் பறிக்கப் போக அழகிய நல்லச்சியின்

தாயினால் இயலவில்லை. அவள் கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்டாள். அதனால் மாங்காய்களைப் பறித்துவர துணைக்குத் தன் மகளை அழைத்துப் போகுமாறு அவள் கூறுகிறாள். அதனால் அழகிய நல்லச்சியின் தந்தை தன் மகளை ஓலாம்போயையிலிருந்து இறக்கி மாங்காய் பறிக்க காட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அன்று மகளுடன் மாங்காய் பறிக்கச் சென்ற போது காட்டில் உள்ள ஒரு பெரிய மாமரத்தில் மாங்காய்கள் குலைகுலையாய்த் தொங்குவதைக் கண்டனர்.அழகிய நல்லச்சியை அவளுடைய தந்தை ஒரு குன்றில் போய் அமருமாறு கூறினான். அழகிய நல்லச்சியும் அவ்வாறே செய்தாள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தப் பாம்பு அவளைக் கடத்திச் செல்ல நினைத்தது.

அழகிய நல்லச்சியை நெருங்கிவரவும் ஆரம்பித்தது. அதைக்காணும் அழகிய நல்லச்சி தன் தந்தையை நோக்கி

ஓலைகள் வருது சீட்டுகள் வருது

கீழுக்கிறங்கடி பாழுந்தன் தகப்பனாரே!

கடல் மிந்து கடிக்குது கடல் கொதுவு கடிக்குது

கீழுக்கிறங்கடி பாழுந்தன் தகப்பனாரே!

எனத் தன்னைக் கொண்டு செல்ல ஒரு பாம்பு வருவதைக் கண்டு தன் தந்தையைக் கீழே இறங்கி வரவேண்டும் என்பதற்காக தன்னைக் கொண்டு செல்ல ஓலைகள் வருகின்றன எனவும் சீட்டுகள் வருகின்றன எனவும் தன்னைக் கடல் கொசுக்கள் கடிக்கின்றன எனவும் கூறுகிறாள். ஆனாலும் தந்தை கீழே இறங்கி வருவதாக இல்லை.அவள் தந்தை மாமரத்தில் இருந்தபடியே அழகிய நல்லச்சியிடம்

தெக்கக்குப் போன தேயமணிக் கொம்பில

மாங்காய அடிச்சுதா(ன்) போடுற(ன்)

பாழுந்தன் பிள்ளையாரே!

வடக்கக்குப் போன வைரமணிக் கொம்பில

மாங்காய அடிச்சுதா(ன்) போடுற(ன்)

பாழுந்தன் பிள்ளையாரே!

என்று அவளை நோக்கித் தான் இப்போது இறங்கிவர முடியாது என்று கூறுகின்றான். சிறிது நேரத்தில் அந்தப் பெரிய பாம்பு அழகிய நல்லச்சியைத் தன் வாளால் சுருட்டியபடி சென்றுவிடுகிறது.

பாம்பு அவளைத் தூக்கிக் கொண்டு காடு மலை என எல்லாம் கடந்து செல்கின்றது. பிறகு கடலின் நடுவே அவளைக் கொண்டு சென்றபோது இருபக்கமும் நீர் விலகி வழிவிடுகிறது. அங்குதான் பம்பின் கோட்டை இருக்கின்றது. அது தன் கோட்டைக்குள் அழகிய நல்லச்சியைக் கொண்டு சென்று விடுகிறது.

மாமரத்தில் இருந்து இறங்கிய அழகிய நல்லச்சியின் தந்தை கீழே அவளைக் காணாது தேடுகிறான். அந்த மாயப் பாம்பு சிறிது நேரத்திற்குள் தன் மந்திரச் சக்தியினால் அவன் தன் மகளை மறந்து போகும்படியாக மனதை மாற்றி விடுகிறது.

மகளை மறந்ததினால் அழகிய நல்லச்சியின் தந்தை தான் பறித்த மாங்காய்களை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்கிறான். வீட்டிற்குச் சென்றதும் தன்னுடைய மகள் எங்கே என்று அழகிய நல்லச்சியின் தாய் ஒருவார்த்தை கேட்கிறாள். கேட்ட அக்கணமே அவளும் தன் மகளை மறந்துவிடுகிறாள். சில ஆண்டுகள் கழிகின்றன. அழகிய நல்லச்சியின் இரு தம்பியரும் வளர்ந்து ஆளாகின்றனர். அப்போது அழகிய நல்லச்சியின் தாய் கர்ப்பமாகிறாள். அப்போது அவளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறக்கிறது. அவன் ஒரு தெய்வப் பிறப்பாகத் தோன்றினான் என அவனுடைய தாயும் தந்தையும் நினைத்தனர். அவனை அன்பாகவும் வளர்த்து வருகின்றனர்.

அவன் வளர்ந்து ஆளானான். பின்பு ஒரு நாள் தன் தாயிடம் தன்னுடன் இரண்டு சகோதரர்கள் மட்டுமே பிறந்துள்ளனரா? வேறு யாரும் இல்லையா? என்று கேட்கின்றான். அதற்கு அவன் தாய் இல்லை மகனே உனக்கு ஒரு அக்கா இருந்தாள். அவள் பெயர் அழகிய நல்லச்சி. அவளை ஒருநாள் உன் அப்பா மாங்காய் பறிக்க துணைக்குக் கூட்டிச் சென்றபோது காட்டில் உன் அக்காவைத் தொலைத்துவிட்டு வந்துவிட்டார் என்று அவனிடம் கூறுகிறாள்.


ஓவியம்: து. சரண்யா

அன்றிலிருந்து தன் அக்காவை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டுமென நினைத்தான். அதற்காக அவன் தினமும் வேட்டைக்குச் சென்றான். அப்போது அங்கு ஓரிடத்தில் பெரும் பாம்பு சென்ற வழியைக் காணுகின்றான்.

தன் அக்காவை அந்தப் பாம்புதான் கொண்டு போயிருக்க வேண்டுமென்று நினைத்து அதனைக் கொன்று எப்படியாவது தன் அக்காவை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று திட்டம் போடுகிறான். அதற்காக அவன் விசம் கொண்ட பூச்சிகளையும் பாம்பு, தேள் போன்ற கொடிய விலங்குகளைக் கொன்று அதன் நெய்யை எடுத்துக் கொண்டான்.

ஒருநாள் தன் தந்தையிடம் பலகாரம் செய்ய மாவு வாங்கி வருமாறு கூறினான். அவன் தந்தையும் அவ்வாறே வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். அவன் அதைக் கொண்டு போய் பலகாரம் செய்தான். அந்தப் பாம்புக்காக இரண்டு பலகாரம் செய்தான். அந்தப் பலகாரத்தை விசம் உள்ள பூச்சிகளிடமிருந்து எடுக்கப்பட்ட நெய்யை விட்டுச் செய்தான். மீதமுள்ள நெய்யில் இரண்டு பீடிகளையும் புகையிலையையும் தயாரித்தான். தன் அக்காவிற்கும் தாய் தந்தை சகோதரர்களுக்கும் விசம் கலக்காத பலகாரங்களைத் தயாரித்துக் கொடுத்தான்.

தன் அக்காவிற்கான பலகாரத்தையும் அந்தப் பாம்பிற்கான பலகாரத்தையும் எடுத்துக் கொண்டு தன் அக்காவைப் பார்க்க விரைந்தான். போவதற்கு முன் தன் தாயிடம் அவன் சென்று தனக்கு கட்டுச்சோறு வேண்டுமெனக் கேட்டான். அவளும் அவனுக்குக் கட்டுச்சோறு கட்டிக் கொடுத்தாள். அவன் தன் தாயிடம் அன்று வீட்டிற்கு வரப் போவதில்லை என்று கூறிவிட்டுச் சென்றான்.

தன் அக்காவைக் காண அவன் காடு மேடுகளை எல்லாம் கடந்து சென்றான். பின்னர் கடலைப் பிளந்து சென்று அந்தப் பெரிய பாம்பின் கோட்டையை அடைந்தான். அங்கே அவன் அக்கா அழகிய நல்லச்சி இருப்பதைக் கண்டான். அவன் சென்ற வேளையில் அந்தப் பெரிய பாம்பு வேட்டைக்குச் சென்றிருந்தது. அந்தப் பாம்பு வருவதற்கு முன் தன் தம்பியைக் குளித்துவிட்டு அறையில் அமர்ந்திருக்குமாறு கூறினாள். அவன் குளித்து முடித்தவுடன் உணவு கொடுத்து அவன் இருந்த அறையைப் பூட்டினாள்.



ஓவியம்: ப. குணசுந்தரி

வேட்டைக்குப் போன பாம்பு திரும்பியது. வந்ததும் இளைப்பாறியது. சிறிது நேரம் சென்றவுடன் அழகிய நல்லச்சி அந்தப் பாம்பிடம் நான் ஒரு விசயம் கூறுவேன் நீ கோபம் கொள்ளக் கூடாது. அவ்வாறன்றி என் மேல் கோபப்பட்டால் நான் இறந்து விடுவேன் என்று கூறுகிறாள்.

உடனே பாம்பு இல்லை இல்லை நான் கோபம் கொள்ளமாட்டென். நீ என்ன சொல்லப் போகிறாய் என்றது. அதற்கு அழகிய நல்லச்சி என்னைப் பார்க்க என் தம்பி வந்திருக்கிறான். அவனை நான் ஒரு அறையில் அமரவைத்திருக்கிறேன் என்றாள். அதற்குப் பாம்பு அப்படியா! அவனை வரச் சொல்லு நானும் அவனைப் பார்க்கிறேன் என்றது.

உடனே அழகிய நல்லச்சி தன் தம்பியை அழைத்து வந்தாள். அவன் தான் கொண்டு வந்த பலகாரங்களை எடுத்துச் சென்று தன் அக்காவிற்கு நல்ல பலகாரத்தையும் விசம் கலந்த பலகாரத்தை அந்தப் பாம்பிற்கும் கொடுத்தான். அவன் தன் அக்காவிடம் உனக்குக் கொடுத்த பலகாரத்தை நீ மட்டுமே சாப்பிடு, உன் கணவனுக்குக் கொடுத்த பலகாரத்தை அவர் மட்டுமே சாப்பிடட்டும் என்று கூறிக் கொடுத்தான்.

இருவரும் பலகாரங்களை உண்டு முடித்தனர். அப்போது பாம்பிற்குப் புகையிலை வேண்டுமெனத் தோன்றியது. ஆனால் அவர்கள் வீட்டில் சிறிதளவு கூட புகையிலை கிடைக்கவில்லை. அதனால் அழகிய நல்லச்சி தன் தம்பியிடம் புகையிலை இருக்கிறதா? என்று கேட்டாள். அவன் விசம் கலந்த புகையிலையைக் கொடுக்கிறான். அதைப் பாம்பு முழுவதுமாகத் தின்று முடித்தது. அனைவரும் உறங்கச் சென்றனர்.

சிறிது நேரம் ஆனதும் பாம்பிற்குப் பீடி குடிக்க வேண்டுமெனத் தோன்றியது. ஆனால் அன்று அவர்கள் வீட்டில் பீடியும் இல்லை. மீண்டும் அழகிய நல்லச்சி தன் தம்பியிடமே சென்று பீடியைக் கேட்டாள். உடனே அவன் விசம் கலந்து கொண்டு வந்த பீடியைக் கொடுத்தான். அந்தப் பாம்பு பீடியையும் முழுவதுமாகக் குடித்து முடித்தது. விசம் அந்தப் பாம்பின் உடலில் கலக்கத் தொடங்கியது. பாம்பு விண்ணுக்கும் மண்ணுக்கும் எழுந்து தன் வால் நுனியில் நின்று தரையில் விழுந்தது.

சற்று நேரத்தில் பாம்பு இறந்தது. தன் அக்காவைக் கூட்டிக் கொண்டு அவன் அந்தக் கோட்டையை விட்டு வெளியேறினான். அந்த நேரத்தில் அவள் கருவுற்றிருந்தாள். அவர்கள் தங்கள் வீட்டை நோக்கி சோகத்தில் நடக்க ஆரம்பித்தனர்.அவர்கள் சென்ற வழியில் எல்லாம் அழகிய நல்லச்சி முட்டையிட ஆரம்பித்தாள். அவள் இட்ட முட்டைகளை எல்லாம் தம்பி உடைத்துக் கொண்டே வந்தான்.



ஓவியம்: ப. குணசுந்தரி

கடைசியாக ஒரு முட்டையை மட்டும் அவனால் உடைக்க இயலவில்லை. அதன்மேல் விறகுகளைப் போட்டு தீ மூட்டி உடைக்க முயன்றான். அந்த முட்டை உடைந்து அதில் இருந்து ஒரு துளி சிதறிப்போய் ஒரு பாறையின் அடியில் நுழைந்தது. அது தன் தந்தைக்கு விசம் கொடுத்துக் கொன்றதற்காக அந்தப் பெண்ணின் வம்சம் தொடரும் வழியில் எல்லாக் குழந்தைகளுக்கும் தலைவலி, காதுவலி,சளி போன்ற நோய்களைக் கொடுப்பேன் என்று கூறி மறைந்தது.

அழகிய நல்லச்சியும் அவளுடைய தம்பியும் வீட்டிற்குச் சென்றனர். அவளைப் பார்த்த பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர். பின்னர் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த அந்த ஊரை விட்டு வெளியேறி வேறு ஊரைத் தேடிச் சென்று மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

................

தகவல். மங்கம்மாள் பாட்டி, வயது72. வில்லோனி செட்டில்மென்ட். 08.09.2018.

<u>அருஞ்சொற்பொருள்</u>

ஓலாம்போய் – சூரல் கொடியால் பின்னப்பட்ட ஒரு பெரிய பை

கராண்டுகம் – அளவில் சிறியது.

*

**மதிப்புரை**

முனைவர் சு. பாத்திமா




# ஜி.குப்புசாமியின் ‘மூன்றாவது கண்’

மொழியாக்க கோட்பாடுகளையும் அணுகுமுறைகளையும் பின்பற்றி அயல் மொழிபெயர்ப்பில் முனைப்போடு செயல்பட்டு வரும் அயல்மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவரான ஜி.குப்புசாமி பல கருத்தரங்கு மேடைகளில் ஆற்றிய உரைகளின் , நேர்காணல்களின் தொகுப்பு நூலே மூன்றாவது கண். இந்நூல் அறிவொளியின் அடையாளமாகக் கருதப்படும் மூன்றாவது கண்களினூடே அயல் மொழி இலக்கிய மொழிபெயர்ப்பாளர்களையும் மூல நூல்களையும் உற்று நோக்கியும் அனுபவித்தும் தனது கருத்துக்களை வெளிப்படையாக உணர்த்துவதுடன் அதன் சிக்கல்களையும் போக்குகளையும் எடுத்துரைக்கிறது.

காலச்சுவடு பதிப்பகதாரால் டிசம்பர் திங்கள் 2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந் நூலை இரண்டு பகுதிகளாகப் பிரித்துள்ளனர். அதன் முதல் பகுதியில் மொழிபெயர்ப்பாளர் ஜி குப்புசாமி பல கருத்தரங்கு மேடைகளில் பேசிய 9 கட்டுரைகளின் தொகுப்பும் இரண்டாம் பகுதியில் நான்கு நேர்காணல்களையும் உள்ளடக்கியது.

முதல் இயலில் பதிவுசெய்யப்பட்டுள்ள கோவையில் நடைபெற்ற பாரதி 125 ஆம் ஆண்டு விழா, புதுமைப்பித்தன் 100 ஆம் ஆண்டு விழா, சுந்தர ராமசாமி 75 ஆம் ஆண்டு விழா மேடைகளில் வாசித்த ஜி குப்புசாமியின் கட்டுரையில் இருபதாம்

நூற்றாண்டின் மொழிபெயர்ப்பில் முன்னோடிகளாக திகழ்ந்த பாரதியார் , புதுமைப்பித்தன் , சுந்தர ராமசாமி ஆகியோரின் பணிகள் குறித்து விரிவாக பேசியுள்ளார்.

பாரதியாரின் மொழிபெயர்ப்புகளில் பகவத் கீதையின் மொழிபெயர்ப்பினை மிகச் சிறந்த மொழிபெயர்ப்பு என்று தமது கருத்தை முன்வைக்கிறார். அதனைக் குறித்துக் கூறும்போது “தமிழில் பாரதியின் பகவத் கீதை அளவிற்கு முழுமையான அதே நேரத்தில் இரத்தினச் சுருக்கமான மொழிபெயர்ப்பு வேறு எதுவும் கிடையாது என்றும் மொழிபெயர்ப்பின் நடுவில் எந்த ஒரு விளக்க உரையோ வியாக்கியானியத்தையோ கொண்டு வராமல் ஒரு நீளமான முன்னுரையில் பட்டினத்தார், தாயுமானவர், திருநாவுக்கரசர் ஆகியோர்களது மேற்கோள்களோடு பகவத் கீதையின் சாரம்சம் அது முன் வைக்கும் தத்துவம், வேதம், உபநிடதங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் குறித்தும் , வேதங்கள் மிகப்பழமையான சமஸ்கிருத மொழியிலும் காலத்தால் பின்தங்கிய உபநிடதங்கள் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டிருப்பது குறித்தான விளக்கங்களும் கீதை குறித்து மேம்போக்கான தப்பான அபிப்பிராயங்கள் போன்றவற்றையும் விளக்குகிறார் ” என்று மிக மிக நீளமான தொடர் அமைப்போடு ஜி.குப்புசாமி பதிவு செய்கிறார். பாரதி தாகூரின் கதைகளையும் பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் வந்தே மாதரம் கவிதைகளையும் பதஞ்சலியின் யோக சூத்திரத்தையும் அரவிந்தரின் சமூக விடுதலைக் கவிதைகளையும் மொழிபெயர்த்துள்ளார் என்ற செய்தியையும் மேடையில் பகிர்ந்து கொண்டுள்ளார்..

தமிழ் இலக்கியத்தின் முன்னோடியாகவும் சிறுகதை மன்னனாகவும் திகழும் புதுமைப்பித்தன் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளரும் கூட என்ற செய்தியையும் ஜி குப்புசாமி எடுத்துரைக்கிறார்.

புதுமைப்பித்தன் ' உலகத்துச் சிறுகதைகள்' எனும்

பெயரில் அயல்மொழி சிறுகதைகளை மொழிபெயர்த்து இருப்பது சிறப்பாகக் கருதப்படுகிறது. படைப்பு மனம் அது உருவாக்கும் கதைகளின் உணர்வு தளம் மட்டுமல்ல அது தேர்ந்தெடுத்து வாசிப்பதும் தன் மொழியில் பெயர்த்துக்கொள்ளவும் செய்யும் என்பதற்கு இவரது ஷெகர் ஜாதியின் மொழிபெயர்ப்பைக் கூறலாம் .இது புதுமைப்பித்தனின் 'சிற்பியின் நரகம்' கதையை ஒத்ததாக உள்ள சிறுகதையாகும். “இலக்கியப் பிரதி தனது மேற்பரப்பு பிரதியுடன் உட்பிரதி ஒன்றையும் கொண்டிருக்கும் .இந்த உட்பிரதியை வெளியே தானாக கொண்டு வரப்பட்டு விடுமா ? “என்ற அய்யப்பபணிக்கரின் வினாவிற்கு விடை தரும் வகையில் புதுமைப்பித்தனின் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளார் இவரது அலெக்சாண்டர் குப்ரின் எழுதிய *YAMA THE PIT* எனும் நாவலின் மொழிபெயர்ப்பு, ஐந்து மேலை நாட்டு நாடகங்களின் மொழிபெயர்ப்பு , மொப்பஸானின் கதைகளின் தழுவல் மொழிபெயர்ப்பு குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டுள்ளது.
புதுமைப்பித்தன் பிறநாட்டு நாகரிக சம்பிரதாயங்கள் மீது உள்ள சந்தேகத்துடனும் பயத்துடனும் கலந்த வெறுப்பைப் போக்குவதற்காக அயல்மொழி மனிதர்களின் பெயர்கள், புறச் சின்னங்கள் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அப்படியே மொழிபெயர்ப்பில் கொண்டு வந்து புதுமையை புகுத்தியவர் என்பதை ஜி.குப்புசாமி மேடையில் பதிவு செய்திருப்பதை அறிய முடிகிறது. இதில் புதுமைப்பித்தனின் மொழிபெயர்ப்பில் நிகழ்ந்த சிறு சிறு சறுக்கல்களையும் சுட்டிக்காட்ட தவறவில்லை.

மூன்றாவது கண்ணில் சுந்தரராமசாமியின் மொழிபெயர்ப்பு குறித்து ஜி.குப்புசாமி கூறுகையில் சுந்தர ராமசாமிக்கு வாய்க்கப் பெற்ற தமிழும் மலையாளமும் கலந்த சூழலும் சமகால மலையாள இலக்கிய எழுத்தாளர்களான தகழி சிவசங்கரபிள்ளை, முகம்மது பஷீர் , கேசவதேவ் ஆகியோரது அறிமுகமும் அவரது மொழிக்குரிய அஸ்திவாரமாக அமைந்து சிறந்த பல மொழிபெயர்ப்புகளைத் தமிழ் இலக்கிய உலகத்திற்கு தந்துள்ளது என்பதை கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. சுந்தர ராமசாமியின் மிக முக்கியமான மொழிபெயர்ப்பு மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரப் பிள்ளையின் செம்மீன் நாவலின் மொழிபெயர்ப்பு எனலாம் . ஜி.குப்புசாமி சுந்தரராமசாமியின் மொழிபெயர்ப்பு திறனை உணர்த்துவதற்காக செம்மீன் நாவலின் பிற மொழிபெயர்ப்புகளை ஒப்பீடு செய்து காட்டுகிறார் மற்றும் செம்மீனின் ஆங்கிலம் , ஹிந்தி மொழிபெயர்ப்புகள் தோல்வியைக் கண்ட மொழிபெயர்ப்புகள் என்றும் சான்றுகளோடு எடுத்துரைத்துள்ளார் . இதற்கு காரணம் மொழிபெயர்ப்பாளர்களின் திறமை குறைவன்று அது அம்மொழி சுமந்து கொண்டிருக்கும் மேற்கத்திய கிறிஸ்தவ கலாச்சார சுமையை இறக்கி வைக்கக் கூடியது அல்ல என்றும் நம் மொழியில் கீழை உணர்வுகளை எவ்வளவு இலகுவாக அளக்க முற்பட்டாலும் ஒரு தூரம் தாண்டிய பிறகு ஒன்று வழமையாக சொற்றொடர்களில் சிக்கிக் கொள்ள நேரும் அல்லது இணையான அல்லது அந்நியமான தளத்திற்கு கொண்டு சென்று விடுகிறது என்று மிக நுட்பமாக ஆய்ந்துரைத்திருப்பது மிகச் சிறப்பு. சுந்தர ராமசாமியின் கவிதை மொழிபெயர்ப்பை ஆய்வு செய்த ஜி குப்புசாமி அவரது கவனமான தேர்ந்தெடுப்பு என்கிறார். *Catching the Letter by the spirit of it* என்ற கூற்றின் படி ஒரு மொழிபெயர்ப்பாளன் சரியான வார்த்தையை மட்டும் தேர்ந்தெடுப்பதில்லை அந்த வார்த்தையையும் வாழ வைக்க செய்கிறார் என்று தமது கருத்தை பதிவு செய்கிறார் .
மொழிபெயர்ப்பில் மிகக்கடினமான மொழிபெயர்ப்பு கவிதை மொழிபெயர்ப்பு என்று கூறி அதற்கு காரணம் ” சில கவிதை வரிகளில் மொழிக்கு வசப்படாமல் இருக்கும் சூட்சமங்களையும் அழகுகளையும் மொழிபெயர்க்க முடியாமல் போய்விடுகிறது என்றுரைக்கிறார் . மேலும் எந்த ஒரு மொழியும் அது விளைந்த மண்ணையும் கலாச்சாரத்தையும் சார்ந்தே உருக் கொண்டிருக்கிறது .வேறொரு அந்நிய மொழியில் மூலப்படைப்பை அதன் அடி வேரோடு பெயர்த்து செய்வது சாத்தியமே இல்லை. . மொழிபெயர்க்கப்படும் மொழி கலாச்சாரப்பின்னணியும் மொழி இலக்கணம் சார்ந்த நுட்பங்களும் மூலப்படைப்பின் படைப்பெழுச்சியையும் உணர்வுதளத்து எதிர்வினைகளையும் மொழிபெயர்ப்பில் நூறு சதவிகிதம் தூய்மையாக கொண்டு வர இடமளிப்பதில்லை. கவிதைவரிகளுக்கிடையே கவிஞர் உண்டாக்கும் மௌனமும் வாக்கிய அமைப்புகளில் பொதிந்திருக்கும் நுட்பங்களும் மூலமொழியின் கலாச்சாரத்தை சார்ந்தே இருக்கும் பட்சத்தில் மொழிபெயர்ப்பு பிரெண்டன் கன்னலி கூறுவதைப் போல கவர்ச்சியான தோல்வியாக முடிகிறது” என்று மிக மிக நீளமான தொடரில் ஒரே மூச்சில் தனது கருத்தைப் பதிவு செய்திருப்பதை காண்கிறோம். இந்த தடைகளையெல்லாம் ஓரளவு கடந்து வெற்றி கண்ட மொழி சுந்தர ராமசாமியின் கவிதை மொழிபெயர்ப்பு என்றும் கூறுவதை காண முடிகின்றது.

இரண்டாவது இயலில் நவீன தமிழ் இலக்கியத்தில் இந்திய மொழிகளிலிருந்தும் பிற நாட்டு மொழிகளிலிருந்தும் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களையும் மறுவாசிப்பு செய்து இந்த அயல் மொழிபெயர்ப்புகள் நவீன தமிழ் இலக்கியத்திற்கு புதிய பாதைகளைத் திறந்து விட்டிருப்பதையும் அப்படைப்புகளைத் தமிழ் நிலத்தில் பொருத்தி வைத்து நம்முடைய கலாச்சாரத்தையும் கலாச்சாரத்தையொட்டிய நம் சரித்திரத்தையும் நம் வாழ்வையும் நமது மரபு பார்வையில் இருந்து முன்னேறி தமிழ் நாவல்களில் புதிய கதை கூறல்

முறைகளையும் புதிய மொழி நடையையும் முயற்சி செய்து பார்த்து அதில் வெற்றி கண்டுள்ளனர் என்றும் பதிவு செய்கிறார்.

அயல்மொழிபெயர்ப்பு நூல்களின் தாக்கத்தால் படைக்கப்பட்ட நூல்களுக்கு மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் ,கல்கியின் அலையோசை, தியாக பூமி, சிதம்பரசுப்ரமணியனின் மண்ணில் தெரியுது வானம், ரா.சு நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம் போன்றவற்றை சான்றாக்குகிறார். மேலும் சரத் சந்திரனின் நாவல்களும் காண்டேக்கரின் எழுத்துக்களும் மு.வரதராசன், நா.பார்த்தசாரதியின் படைப்புகளில் பிரதிபலிக்கிறது என்றும் அலெக்சாண்டர் டு மாஸின் *The three musketeers* என்ற நாவலின் தாக்கம் கா.சி வெங்கடமணியின் தேசபக்தன் நாவலிலும் அகிலனின் வெற்றித் திருநகர் நாவலிலும் கல்கியின் பார்த்திபன் கனவிலும் வெளிப்படுகிறது என்று நுட்பமாக ஆய்துரைத்துள்ளார் .

தமிழிலுள்ள வட்டார நாவல் வகைகளிலும் அயல் மொழிபெயர்ப்பு நாவல்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதற்கு *Pearl S Buck* க்கின் தி குட் எர்த் , ஆர் சங்கரதாஸின் மண்ணாசையிலும் ஆர் .சண்முகசுந்தரத்தின் நாகம்மாளிலும் தென்படுவதைச் சுட்டி நிறுவுகிறார்.
தமிழிலக்கியப்பரப்பில் மிகுதியான தாக்கத்தை ஏற்படுத்திய அயல் மொழிபெயர்ப்புகள் இரஷ்ய மொழிபெயர்ப்புகளே என்று கூறி மாக்ஸிம் கார்க்கியின் தாய் , லேவ் தால்ஸ்தோயின் புத்துயிர்ப்பு போன்ற நாவல்களின் தாக்கம் தொ.மு.சி இரகுநாதனின் பஞ்சும் பசியும், கி.ரா.வின் கோபல்ல கிராமம் போன்ற இனவரைவியல் நாவல்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பறை சாற்றுகிறார் ஜி.குப்புசாமி. பா. வெங்கடேசனின் எழுத்துக்களில் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களின் பாதிப்பும் ஏற்பட்டிருப்பதைக் கூறும் மொழிபெயர்ப்பாளர் ஜி குப்புசாமி , புதுயுக அமெரிக்கா கொலாஸ் எழுத்துக்களின் எதிர் குரலை சாருநிவேதிதாவின் குரலில் வெளிவரத் தொடங்கின என்றும் இந்நூலில் பதிவு செய்கிறார். இவ்வாறு அயல் மொழிபெயர்ப்புகளை வாசித்து தனக்குள் உள்வாங்கி படைப்புகளைப் படைத்தவர்கள் வெளிப்படையாக கூறுவதில்லை ஆனால் விதிவிலக்காக தேவி பாரதி இருப்பதையும் தேவி பாரதியே தமது நிழலின் தனிமை நாவலின் முன்னுரையில் தனது நாவலிற்கு காரணமாக இருந்த நாவல் ஜான் பான்வில்லின் கடல் எனும் நாவலே என்று கூறியிருப்பதையும் எடுத்துரைக்கிறார்.

சாகித்திய அகாடமி தமிழ் பல்கலைக்கழகம் இணைந்து **16** ஆகஸ்ட் திங்கள் **2019**-ல் நடத்திய கரத்தரங்கில் தமிழ் நவீன தமிழிலக்கியத்தில் சிறந்தவையாகப் போற்றப்பட்ட அனைத்து எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புகளையும் ஆய்ந்து அவற்றிலெல்லாம் அயல் மொழிபெயர்ப்புகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளன என்று ஜி.குப்புசாமி ஒரு பெரிய பட்டியலை எடுத்துரைத்து பேசியிருப்பதை காண முடிகின்றது.
மூன்றாவது கண்ணின் மூன்றாவது இயலில் மொழிபெயர்ப்புகளை மட்டும் தேடி வாசிக்கும் வாசகராக குப்புசாமி இருந்திருப்பதை அறிய முடிகிறது. பல அயல் மொழி மொழிபெயர்ப்புகளை முன்வைத்து அதன் சிறப்பம்சங்களையும் எடுத்துரைத்துள்ளார். மிக முக்கியமான படைப்புகள் விளாமெதிர் கொரலென்காவின் கண் தெரியாத இசைஞனையும் லேவ்தால்ஸ்தாயின் புத்துயிருப்பையும் மொழிபெயர்த்த ரா. கிருஷ்ணய்யாவின் எழுத்துத்திறனை வெளிக் கொணருகிறார் . அவர் மொழிபெயர்ப்புத் துறையை தேர்ந்தெடுப்பதற்கு காரணமான படைப்புகள் என்று போற்றுவதையும் காணலாம்.

பிரெஞ்சு மொழியில் அந்துவான் து செந்த் எக்ஸஞ்பெரியால் எழுதப்பட்ட குட்டி இளவரசனை வெ. ஸ்ரீராம், ச.மதன கல்யாணி ஆகியோரின் மொழிபெயர்ப்பு , ஆர்.சிவகுமாரின் மொழிபெயர்ப்பான ஃபிரான்ஸ் காஃப்காவின் உருமாற்றம், சுகுமாரன் மொழி பெயர்த்த துருக்கி நாவலான அஸிஸ் பே சம்பவம் , ஓ.வி.விஜயனின் கசாக்கின் இதிகாசம் போன்றவற்றை சான்றாக்கியிருப்பது ஜி.குப்புசாமியின் வாசிப்பு பரப்பைக் காட்டுகிறது.

அதற்கு அடுத்த இயலில் மொழிபெயர்ப்புகளினூடாக நவீன தமிழ் இலக்கியங்கள் மறுவாசிப்புச் செய்ய வேண்டிய தேவைகளை வலியுறுத்தி செல்கிறார் . பல்வேறு இந்திய மொழிகளிலும் நவீன இலக்கியங்கள் அவற்றின் சகோதர மொழிகளில் பெயர்க்கப்பட்டு வரும் நீண்ட மரபும் நம்மிடையே இருப்பதை உணர்த்தி அதில் மொழிபெயர்ப்பாளர்கள் தம்முடைய கலாச்சார பரிவர்த்தனை செய்வதையும் சுட்டிக் காட்டுகிறார் . மொழிபெயர்ப்பாளர்கள் சந்திக்கும் மிகப்பெரிய சவால் ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்ட படைப்பை மீண்டும் மீண்டும் மொழிபெயர்ப்பது தான் என்கிறார் ஜி குப்புசாமி. தன் மொழியின் கலாச்சாரம் சார்ந்த பண்பாட்டு அம்சங்களை அயல்நாட்டு இலக்கியத்தை மொழிபெயர்க்கும் போது சேர்த்துவிடுவதால் மொழிகளுக்கிடையேயான பரிவர்த்தனைகளும் பண்பாடுகளுக்கிடையேயான புரிந்து கொள்ளலும் மறுக்கப்படுகிறது. ஒற்றைப் பண்பாட்டில் அடைத்து விட எழுத்தாளர்கள் முயற்சிப்பதும் புதிய பிறசாத்தியப்பாடுகளை அனுமதிக்காது இருப்பதும் அபாயகரமானதாகும் என்று எச்சரிக்கை விடுகிறார் ஜி குப்புசாமி . இத்தகைய மொழிபெயர்ப்புக்கு அன்னா கரீனினா நாவலை வெ. சந்தானம் மொழிபெயர்த்தைச் சான்றாக்குகிறார் .

"மொழிபெயர்ப்புகள் சந்திக்கும் மற்றுமொரு சவால் அவை ஒரு காலத்தில் ஏற்புடையவையாக இருந்து பிந்தைய காலத்தில் ஏற்புடையதல்லாமல் போய்விடும்" என்ற லாரன்ஸ் வெனுதியின் வார்த்தைகளைக் குறிப்பிட்டு சான்றாக காஃப்காவின் ' தி காஸ்டில் ' என்ற நாவலைக் குறிப்பிடுகிறார். இலக்கியத்துக்கு நிதானமான வாசிப்பும் கவனமான வாசிப்பும் அடிப்படைத் தேவைகள் ஆகும் . அவ்வாறு வாசிக்கும்போது தான் வாசகனின் வாழ்க்கை அனுபவங்களும் அவன் கற்பனைகளும் இலக்கிய படைப்பின் உயிர்நாடியை தொட்டு விடும்போது அக்கணத்தில் படைப்பாளியும் வாசகனும் அவ்விலக்கியப் பிரதியோடு ஒன்று கலந்து விடுகின்றனர். இலக்கியத்தின் நோக்கம் முழுமை பெறுவது இச்சங்கமத்தில் தான் என்றும் ஜி குப்புசாமி பதிவு செய்கிறார்.

காலச்சுவடும் எனது மொழிபெயர்ப்புகளும் எனும் தலைப்பில் அமைந்த இயலில் ஜி குப்புசாமி தமது மொழிபெயர்ப்புகளையும் மொழிபெயர்த்த நூல்களைக் குறித்தும் வெளிப்படுத்துகிறார். ஜி.குப்புசாமியின் முதல் மொழிபெயர்ப்பு அருந்ததிராயின் கட்டுரை மொழிபெயர்ப்பே. அருந்ததிராயின் ஸ்மால் திங்ஸ் என்ற நூலை சின்ன விஷயங்களின் கடவுள் என்ற பெயரில் மொழிபெயர்த்து தந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இம்மொழிபெயர்ப்பின் போது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் கடுமையாக உழைக்க வேண்டி யிருந்தது. இம்மொழிபெயர்ப்பை நிறைவு செய்ய 14 மாதங்கள் ஆயிற்று என்றும் தமது அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார் .
ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளனுக்கும் ஏதேனும் ஒரு உந்து சக்தி யார் மூலமாவது கிடைக்கும் என்பதற்கு ஜி குப்புசாமியை அயல் மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபடச் செய்த உந்து சக்தியாக நண்பர் காலச்சுவடு கண்ணன் இருந்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. இவரே அயர்லாந்து நாட்டு இலக்கியங்களைப் மொழிபெயர்ப்பதற்கான உரிமத்தை பெற்று தந்தவர் என்று நன்றி பாராட்டுவதையும் காண முடிகிறது. ஜி குப்புசாமி அயர்லாந்து எழுத்தாளர் பாமுக்கின் தீவிரவாசகர் . இவர்மீது இருந்த பித்து தான் இவரது படைப்புகளைப் மொழிபெயர்க்கத் தூண்டியது என்று கூறி ஜான்பான் வில்லின் Sea என்ற நாவலை மொழிபெயர்த்ததோடு பாமுக்கின் பனி, வெண்ணிற கோட்டை , கருப்புப் புத்தகம் ஆகிய நான்கு நாவல்களை மொழிபெயர்க்கும் உரிமத்தை ஒரே சமயத்தில் காலச்சுவடு கண்ணன் பெற்றுக் கொடுத்திருப்பதை நினைவு கூறுகிறார். அதில் மூன்று மட்டும் மொழி பெயர்த்து முடித்து கொடுத்ததாகவும் பதிவு செய்துள்ளார். ஜி.குப்புசாமி பாமுக்கின் நாவல்களை மொழிபெயர்க்கும் போது ஐயங்களை தீர்த்து வைக்க காலச்சுவடு கண்ணன் பேருதவி செய்திருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. ஜி. குப்புசாமி நாவலில் வரும் பெயர்ச்சொற்கள் உச்சரிப்பிலிருந்து ஒவ்வொரு அத்தியாயத்திலும் பாமுக்கு உட்கிடையாக பொதிந்து வைத்திருக்கும் நுட்பங்கள் குறித்து நன்கறிந்த பிறகு மொழிபெயர்த்துள்ளார் என்பதை அறிய முடிகிறது . மொழிபெயர்ப்பாளனுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான தகுதிகளில் இதுவும் ஒன்று . மொழிபெயர்ப்புப்பணியை ஓர் இயந்திரத்தனமான செயல்பாடாக கருதாமல் முடிந்தவரை மூலப்படைப்புக்கு அருகில் கொண்டு செல்வதற்கும் படைப்பாளியின் குரலையும் படைப்பின் தொனியையும் சிதைக்காமல் மறு உருவாக்கம் செய்வதற்கும், பேருழைப்பு தேவைப்படுகிறது. இது வாசகனுக்கு தெரிய வேண்டிய அவசியம் இல்லையெனினும் பதிபகத்தாருக்கு தெரிந்திருக்க வேண்டும். அவ்வகையில் காலச்சுவடு பதிப்பகம் ஒரு சிறந்த உதாரணமாக திகழ்கின்றது என்று பாராட்டுகின்றார்.

மூன்றாவது கண் நூலின் இரண்டாம் பகுதி மொழிபெயர்ப்பாளர் ஜி குப்புசாமியின் நான்கு நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. அவரது புகழ் பெற்ற மொழிபெயர்ப்புகளான அருந்ததிராயின் தி மினிஸ்ட்ரி ஆஃப் அட்மோஸ்ட் ஹாப்பினஸ் என்ற நூலை பெரு மகிழ்ச்சியின் பேரவை என்ற மொழிபெயர்த்துள்ளதையும் வெண்ணிற கோட்டை, என் பெயர் சிவப்பு என்ற மொழிபெயர்ப்புகளும் தி சீ எனும் நாவலை கடல் என்று மொழிபெயர்த்த போதும் கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்து இருப்பதை காண முடிகின்றது. முற்பகுதியில் பல கருத்தரங்க மேடைகளில் பேசியவையே இங்கும் பல இடங்களில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது.

இந்நூலை நிறைவு செய்யும் கனலி நேர்காணல் வழியாக மொழிபெயர்ப்பாளர் ஜி. குப்புசாமியின் அயல் மொழிபெயர்ப்பு அனுபவங்களும் தற்கால மொழிபெயர்ப்பாளர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை . மூன்றாவது கண் எனும் நூலின் வாயிலாக வாசகர்களுக்கு பல அயல்மொழி நூல்களின் அறிமுகம் கிடைக்கின்றது .மொழிபெயர்ப்பு நுட்பங்களையும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தெரிந்து கொள்வதற்கான ஒரு வாயிலாக இந்நூல் அமைகின்றது .பிறமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு பெயர்த்த நூல்களை மட்டுமே ஜி குப்புசாமி இந்நூலில் பதிவு செய்திருப்பது சற்று வருத்தமாகவே உள்ளது . பரந்த வாசிப்பு அனுபவமிக்க மொழிபெயர்ப்பாளரான ஜி குப்புசாமி தமிழ் மொழியில் இருக்கும் சிறந்த இலக்கியங்களை அயல் மொழிக்கு கொண்டு செல்லும் பணிகளை செய்துள்ளாரா? செய்கிறாரா? என்ற வினாக்களுடன் எனது மதிப்புரையை நிறைவு செய்கின்றேன்.

**பதிவு**

**அகமது கனி**

# நடவு - 30

# அம்சப்ரியாவின் ‘உதிரும் வேர்கள்’ (தமிழ்)
# டி.ஸ்ரீவத்சனின் ‘முப்பது கதகள்’ (மலையாளம்)

*பாலக்காடு இலக்கியச் சோலையின் விதை – நடவு-30 கடந்த 27.10.2024 ஞாயிறு அன்று தத்தமங்கலம் கவின்மணிச்சுடர் இல்லத்தில் நடந்தேறியது.*

*நடவு, காலை 10 மணிக்கு பாவனா சு. தலைமையில் தொடங்கியது.*

*சிறப்பு விருந்தினர்களாக — தமிழ்க் கவிஞரும் எழுத்தாளருமான பொள்ளாச்சி தமிழாசிரியர் திரு. க.அம்சப்ரியா, பாலக்காடு விக்டோரியா கல்லூரி மலையாளமொழித் துறைத் தலைவரும் எழுத்தாளருமான பேராசிரியர். டி.ஸ்ரீவத்சன், யுவ புரஸ்கார் விருதாளர் ப. காளிமுத்து — ஆகியோர் வருகை தந்திருந்தனர்.*

*நிகழ்வில் முதலாவதாக, பாவனா சு. விருந்தினர்களையும் பிற பங்கேற்பாளர்களையும் வரவேற்றுப் பேசினார்.*

*பின்னர் "யான் பெற்ற இன்பம்" தலைப்பில்.................*
*தமிழ்மொழித் தரப்பில் — கவிதா மணாளன், இரா.கீர்த்தி, அகமதுகனி ஆகியோரும்... மலையாளமொழித் தரப்பில் — சித்தூர் கல்லூரி மெய்யியல் பேராசிரியர். மோகனன், இலக்கிய ஆர்வலர். ஃபைசல் ஆகியோரும்... தாங்கள் படித்த கதைகள்-கவிதைகள் மற்றும் காட்சியனுபவம் குறித்த தம் அனுபவங்களை – எண்ணங்களை பகிர்ந்துகொண்டனர்.*

*அடுத்து, ஆய்வியல் மாணவர் இரஞ்சினி தொடங்கிவைத்த "பனுவல் நயம்" அமர்வில்.......*

*க.அம்சப்ரியாவின் "உதிரும் வேர்கள்" தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு .......*

*இவ் அமர்வில், கவிதா மணாளன், பாவனா ப., பாவனா சு., இரா.கீர்த்தி, இரஞ்சினி, அகமதுகனி ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்வுக்கு வர இயலாத சித்ராதேவியின் உரை வாசிக்கப்பட்டது.*

*டி.ஸ்ரீவத்சனின் "முப்பது கதகள்" மலையாள சிறுகதைத் தொகுப்பு ......*

*இவ் அமர்வில், சீமா ராஜ்சங்கர், சிவதாசன் மடத்தில், சுஜானா அசீஸ் ஆகியோர் பங்கேற்றனர்.*

*முடிவில்,*
*—- "உதிரும் வேர்கள்" நூலாசிரியர் க.அம்சப்ரியா அவர்கள், நூலிலுள்ள சிறுகதைகள் எவ்வாறு தம் சொந்த வாழ்வனுபவங்களிலிருந்து கருக்கொண்டு உருக்கொண்டன என்பதை விவரித்து சிறப்பான ஏற்புரை நிகழ்த்தினார்...*
*—- மலையாள எழுத்தாளர் பேரா.ஸ்ரீவத்சன் ஏற்புரையில், தம் புறச்சூழல் மற்றும் மனச்சூழல் சார்ந்து கதைகள் உருக்கொண்ட விதத்தையும் அவற்றை நூலாக்கம் செய்த அனுபவத்தையும் பகிர்ந்துகொண்டார். தம் கதைகள் குறித்து, முதன்முதலாக நேருக்குநேர் வாசகர்கள் நயந்துரைத்தது ஒரு புதிய அனுபவம் என்றும் குறிப்பிட்டார். அதற்காக தாம் மட்டற்ற மகிழ்ச்சியடைவதாகவும் அதற்கு காரணமாக இருந்த "விதை" அமைப்புக்கு தம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிப்பதாகவும் கூறினார்..*

*பாவனா ப. தலைமையில் நிகழ்ந்த "கவிப்பட்டறை"யில் போட்டியாளர்கள் பிரேம்தாஸ்(மலையாளம்), இரா.கீர்த்தி, இரஞ்சினி, பாவனா சு., பாவனா ப. ஆகியோர் கவிதைகள் வாசித்தனர். போட்டியில் இடம்பெறாது கனல்வனன்(மரபுப்பா), அகமது கனி(ஹைக்கூ) ஆகியோர் கவிதைகள் வாசித்தனர்.*

*நிறைவாக, சிறப்பு விருந்தினர்கள், கவிப்பட்டறை வெற்றியாளர்களுக்கு புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டன.*

*இந்த விதை-நடவில் மேலே குறிப்பிடப்பட்டோர் தவிர கௌதமன் ஐயா, ஜானகிப்ரியா, கல்லூரி மாணவர் ரம்யா சு. ஆகியோரும் கலந்துகொண்டனர்.*

*கவிதா மணாளன் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இவ் "விதை"நிகழ்வு, இறுதியில் பாவனா சு. நன்றி நவில இனிது நிறைவுற்றது*